# அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான்



தமிழ் மன்றம்

843.12
கோமஸ்
SLIPR

ஏ.பி.வி.கோமஸ்

# அங்கமெல்லாம்

# நெறஞ்ச மச்சான்

ஏ. வி. பி. கோமஸ்

தமிழ் மன்றம்

# 'ANGAMELLAM NIRANJA MACHAAN'

## A· V· P· GOMEZ

Copyright reserved

First Edition in March - 1988

**Tamil Mandram**
Galhinna, Kandy, Sri Lanka

**Price Rs. 10-00**

Printed at "VAT PRINT 96, Justice Akbar Mawatha Colombo 2.

## மலையக இலக்கியத்தில்
# புதிய முயற்சி

இலங்கையில் பிரதேச இலக்கியங்களுக்கான தனித்துவம், மலையக இலக்கியங்களுக்கும் இருக்கின்றன என்பதை உறுதியுடன் சொல்ல மலர்ந்துள்ளது. பிரபல எழுத்தாளர் திரு. ஏ. பி. வி. கோமஸ் அவர்களின் நாட்டார் பாடல் இடையிட்டகுறுநாவல் 'அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான், தேயிலைத் தோட்டத்தில் மலர்ந்த ஒரு காதல் கதையை. நாட்டார் பாடல் அடிப்படையிலான இக்குறுநாவல் அழகாக விவரிக்கிறது இதுவரை சிறுகதை, கவிதை, குறுநாவல் நாவல் என்று மலர்ந்த மலையக இலக்கியத்தில் இக்குறு நாவல், புதிய முயற்சியாகும்.

தேசிய இலக்கியத்தில் மலையக இலக்கியத்தை சேர்த்து வைப்பதற்கு, மலையக இலக்கியத்திற்குக் கிடைத்த புதிய நபிக்கை திரு. ஏ. பி. வி. கோமஸ் அவர்களின் 'அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான்' மலையகத்தைப் பொறுத்த வரையில் இது புதிய முயற்சியாகவே, மலர்ந்துள்ளது.

கிராமிய பாணிப் பாடல்கள் இன்றைய திரையுலகில் கொடிகட்டிப் பறக்கின்ற இந்த நேரத்தில், இந்தப் புதிய முயற்சியில் வருகின்ற பாடல்கள், வாசகர்கள் யாவரையும் வாய்விட்டு, தாளம் போட்டுச் பாடச் செய்யும்.

மறைக்கப்பட்டு வருகிற கிராமிய தோட்டக் கலைகளை, இலக்கியங்களை புதிப்பித்துத் தொகுக்கிற பணியில் ஆத்ம உணர்வுள்ள சில எழுத்தாளர்கள்தான் முயற்சிக்கிறார்கள். அந்த வகையில் எழுத்தாளர் திரு.ஏ பி. வி. கோமஸ் அவர்கள் படைத்துள்ள இந்தக் குறுநாவல்மலையக இலக்கியத்தில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கும் என்பதில் சந்தேகமில்லை.

திரு. ஏ. பி. வி. கோமஸ் அவர்களின் இலக்கியப்பணி தொடரட்டும்... அதே நேரத்தில், இலங்கை வாசகர்கள் இது போன்ற முயற்சிகளுக்கு ஆதரவு நல்க வேண்டும். அத்தகைய ஆதரவில்தான் புதிய முயற்சிகள் வெற்றி பெறலாம்

367, பிரதான வீதி,
மாத்தளை.

மாத்தளை சோமு

# என் நன்றி

பத்து மாதஞ் சுமந்து, பாரியவருத்தத்தின் பின், பெற்றெடுத்த ஒரு பாலகன்மேல், ஏற்படுகின்ற பந்தமும் பாசமும், பரிவுந்தான் இந்தப்படைப்பின்மேல் எனக்கு ஏற்படுகின்றது ஏனெனில்–

முப்பது ஆண்டுகால எழுத்துலக அனுபவமிருந்தும், புத்தக வடிவில் வெளிவருகின்ற என்னின் முதல்படைப்பு இதுதான் எனவே-

இதனை வெளியிட முன்வந்த நல்ல இதயங்களுக்கு, என்னுடைய நன்றியைத் தெரிவிக்க வேண்டியது எனது பாரிய கடமையாகிறது. முதலில்–

நாட்டார் பாடல்கள் இடையிட்ட இந்த 'குறுநாவலை' பொறுப்புடன் வெளியிடும் கல்ஹின்னை தமிழ் மன்றத்தினருக்கு, விசேடமாக அதன் இதயத்துடிப்பாய் விளங்கும், அதன் இயக்குநரும். இலக்கிய ஆர்வலரும், இனிய நண்பருமான சட்டத்தரணி எஸ். எம். ஹனிபா அவர்களுக்கு, என் இதயங்கனிந்த நன்றியை வழங்க வேண்டியவனாய் உள்ளேன். இன்னும்–

இந்தக் குறுநாவலை 1965ல், வாராவாரம், தங்கள் மேலான 'சுதந்திரன்' ஏட்டில் வெளியிட்ட 'சுதந்திரன்' தாபனத்தினருக்கு எனது நன்றி உரித்தாக வேண்டும் மேலும்-

இந்தச் சிறிய காணிக்கைக்கு, காத்திரமானதோடு அணிந்துரை வழங்கிய, இளைய தலைமுறையின் பிரபல மலையக எழுத்தாளரும், சிறுகதை படைப்பாளியுமான ''மாத்தளை சோமு'' அவர்களுக்கும் எனது நன்றி...

அல்லாமலும்...

அட்டைப்படத்தை உருவாக்க உதவி, பலவேளைகளிலும் எனக்கு இப்புத்தகத்தை வெளியிட ஊக்கமளித்த, மலையக கலை, இலக்கியப் பேரவைச் செயலர், அந்தனி ஜீவா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விழைகின்றேன்.

நல்ல முறையில் இப்புத்தகத்தை உருவாக்கித் தந்த VAT PRINT நிறுனத்தினருக்கும், என்னுடைய படைப்புக்களை நாலுருவில் காணவேண்டும். என்று எனக்கு அன்புத் தொந்தரவு தந்த இளைய தலைமுறையைச் சேர்ந்த இலக்கிய ஆர்வலர்களுக்கும்... இந்நூலை வாங்கி ஆதரவை நல்கும்எல்லா நல்லிதயங்களுக்கும் என் நன்றிஉரித்தாகட்டும்.

அதிபர்,
மா/மந்தண்டாவளை த. ம. வி.
மாத்தளை.

ஏ. பி. வி. கோமஸ்
–''ஜெயம்''-

# எழுதியவர் பற்றி....

முப்பது ஆண்டுகளாக எழுத்துத்துறையில் நிலைத்து நிற்கும் பல்கலைச் செல்வர் ஏ. பி. வி. கோமஸ் காலஞ் சென்ற ஏ. எஸ், கோமஸ் அவர்களினதும் திருமதி ஜெயம் மாள் கோமஸினதும் இளைய புதல்வராவார்.

இவர் கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர் பொரல்லை சகல புனிதர்கள் கல்லூரி. தெமட்டகொடை புனித ஜோன்ஸ் கல்லூரி கொட்டாஞ்சேனை மத்திய கல்லூரி. கோட்டே கிறித்தவ கல்லூரி பேராதனிய பல்கலைக் கழகமாகியவைகளில் கல்வி கற்ற பீ. எ. பட்டதாரியாவார்

எட்டியாந்தோட்டை புனித கபிரியேல் கல்லூரி, மாவனல்லை சாஹிரா மகாவித்தியாலயம். கேகாலை புனித மரியாள் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராகவும் பணியாற்றி, தற்பொழுது மாத்தளை மந்தண்டாவளை தமிழ் மகாவித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றி வருகிறார்

இவர் சிறுகதை, கட்டுரைகள் எழுதுகின்றவர், கவிஞர் நாடகாசிரியர், நடிகர், பேச்சாளர், விளையாட்டு வீரர் சிறுகதைகளுக்கு அகில இலங்கை ரீதியில் பரிசில்கள் பெற்றுள்ள இவர், 'ஜெயம்' என்ற புனைப் பெயரில் கவிதைகள் எழுதுவதுடன் ஏராளமான கவியரங்குகளுக்குத் தலைமை தாங்கியுள்ளார்.

சிறுவயது முதலே நாடகத்துறையில் ஈடுபாடு கொண்டிருக்கும் இவர் பல்கலைக்கழகத்தில் கற்ற பொழுது பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் 'துரோகிகள்' நாடகத்தில், பேராசிரியர் கைலாசபதி சிவத்தம்பி போன்றோருடன் ஒரு முக்கிய பாத்திர்த்தில் நடித்தார்.

மலையக நாட்டார் பாடல்களைத் தொகுத்த இவர், நாட்டார் பாடல்கள் பற்றிய தொடர் பேச்சுக்களை, வானொலியில் நிகழ்த்தியுள்ளார்.

நூற்றுக்கு மேலான சிறுகதைகளையும் ஆயிரக்கணக்கான கட்டுரைகளையும், கவிதைகளையும் எழுதியுள்ள இவரின் படைப்புகள் எதுவுமே, இக்காலம் வரைக்கும் நூலுருவில் வெளிவரவில்லை. இதுவே இவரின் கன்னி வெளியீடு.

இந்த இலக்கியப் படைப்பு, இவருக்கு மேலும் புகழ் தேடித் தரும் என்று பெரிதும் எதிர்பார்க்கலாம்.

எஸ். எம். ஹனிபா

# 1

அது ஒரு தேயிலைத் தோட்டம்தான், சிறுசிறு குன்றுகள்; செந்நிறப்பாறைகளால் ஆகியவை போன்று செந்நிற மணல் வாளிப்புடையன. பச்சிலைத் தளிர்கள் படர்ந்திருந்தன. சென்நிற மேனியின் மேல் பச்சை நிற ஆடை போர்த்திடப் பட்டிருந்ததைப் போறத்தான் காட்சியளித்தது. அச் சிவந்த மேனியில் ஓடிய நரம்புகள் அத்தோட்டத்தின் உழைத்து உழைத்து உருக்கேறிய உடலங்களைத்தான் ஞாபகப்படுத்தின . ஆமாம். மேனிதான் அந்தச் செந்நிறமான மணல். நரம்புகள்தான் அந்தச் தேயிலைச்செடிகளின் வேர்கள், பச்சைநிறச் சேலைதான் அவைகளைப் போர்த்தியிருந்த தேயிலைச் கெடிகள்...

அதிகாலை நேரம். விடிந்தும் விடியாத பொழுது. கூடையையும் கையிலெடுத்துத் தோளிலிட்டுக்கொண்டு ஒய்யார நடைநடந்து அசைந்தாடி வருகிறது இடை நுடங்க பச்சை நிறச் சேலை போர்த்த ஒரு மெல்லுடல். உழைத்த, உருக்குலைந்த கறுத்த மேனி என்றாலும் பருத்த தனங்கள் பருவத்தின் எழிலழகைக் கூட்டி நின்றன. கறுத்த மேனிக்கு அந்தப் பச்சை நிறச் சேலை கன கச்சிதமாய் பொருந்தியது.

ஆமாம் கன்னிப் பெண் அவள் என்றாலும் அவளும் ஒரு களம் நோக்கித்தான் போய்க்கொண்டிருக்கிறாள். அது தான் அவர்கள் இருட்டு நேரம் வெளுக்கு முன்னமேயே போய்ச் சேரவேண்டிய களம். காதற் களமோ? என்ற எண்ணம் வேண்டாம். அது அவர்களின் வேலைத்தளம் 'பெரட்டு' என்றழைத்தார்கள் அவர்கள். ஏன் 'மஸ்டர் கிரௌண்ட்' என்று பவுசாகவும் அழைத்தார்கள் அவர்கள் 'பெயர் ஏட்டில்' பெயர் புதிய புதிய வேலைத்தளம் நோக்கிச் சென்றவர்கள்தான் இப்பொழுது 'பெரட்டுக்குப்' போகிறார்கள். அந்தக் களத்துக்குப் போய்த்தான் இன்றைய

பொழுது தனக்கு என்ன வேலே, எந்த மலேயில் வேலே? என்று அறிந்து கொள்ள வேண்டியிருந்தது. ஆதலினுல்தான் அந்த அழகிய ஒயிலாளும் ஆடியசைந்து ஓடி வந்தாள் களம் நோக்கி. ஆடிவரும்போது அவள் மனம் நினைக்க வாய் முணுமுணுத்தது...

அடிச்சிடுவான் பெரட்டுத் தப்பு
அவசரமா எழும்பணும்
ஆக்கிவச்ச பழைய கூழ
அவதியோட குடிக்கணும்

என்ன செய்வாள்?

விடியும் முன்னரே அவள் வேலேக்குவரவேண்டியிருந்தது. காலேயில் எழுந்து சமைத்து, சுடச்சுடச் சாப்பிட்டுவிட்டுப் புறப்பட முடியுமா என்ன? வேலேக்காரியிருந்தாளா எடுபிடி வேலே செய்ய? அந்த பாக்கியம் அவளுக்கெங்கே? அந்தோ! இரவோடு இரவாக சமைத்து வைத்து விட்டுத்தான் படுக்கைக்குப் போகவேண்டியிருந்தது. அதுவும் என்ன? முத்துச் சம்பா அரிசியா அவள் சமைத்தாள்? இல்லே. கஞ்சி காய்ச்சி வைத்துவிட்டுப் படுத்தாள். காலேயில் அது இருந்தது. அவசர அவசரமாய்க் குடித்தாள். புறப்பட்டாள் பாவம். என்றாலும் அந்த வழியாகத் தனிமையில் நடந்து வரும்போது அவள் மனதில் இன்னும் எண்ணங்கள் உதித்தன. மனம் எண்ண வாய் அசைந்தது. உள்ளத்தில் எண்ணம் எழ அது உரு வெடுத்தது.

இருட்டு நேரம் வெளுக்கு முன்னே
பெரட்டு களம் போகணும்
எந்த மலே, கொழுந்து என்னு
இரட்டை நின்னு வாங்கணும்'

உம். அவளுக்கும் வேலே செய்வதும், ஏதோபோல் இருந்தது. தன் வேலேமேல் அவளுக்கு அவ்வளவு வெறுப்பில்லே. சில வேளே, அவள் போகிற மலேக்கு வருகிற கங்காணியைப் பொறுத்துத்தான் அவள் மன நிலேயும் மாறியது. வேலேயில்



பிடிப்பும் வெறுப்பும் ஒரு கங்காணியைப் பொறுத்திருந்ததா? ஆம். அந்த குறிப்பிட்ட கங்காணி வந்து வாய்த்துவிட்டால்... அவள் ஏன் அப்படி அடித்துக்கொள்ள வேண்டும்' உள்ளம் ஏன் அப்படி பதைபதைக்க வேண்டும், மேனியெல்லாம் ஏன் ஒரு மின்சார சக்தி பாயவேண்டும்!

விதியின் விளேயாட்டாலோ அல்லது அவள் நம்பிக் கொண்டிருந்ததுபோல் மாரியாத்தாவின் கோபத்தாலோ வேறு கங்காணி வந்து வாய்த்துவிட்டால் அவள் உள்ளம் படும்பாடு. அவன் வந்தால் வேலே அதிகமிராது. கண்டிப்பும் இராது. ஆனுல் மற்றவர்கள் வந்து விட்டால்.,. அப்பப்பா!

'மொட்ட பிடுங்கி ஒதுக்கணும்
முத்தல் இலே பொறுக்கணும்
முழுப் பேரு போட்டு வர
மூட்டைத் தூக்கி சாகணும்'

ஐயோ! ஐயோ! மாரியாத்தா, நீதான் காப்பாத்தணும். அந்த 'அவர் இன்றைக்கு எங்களுக்கு வந்து சேரணும் இல்லேன்னு; உண்மையிலே மாரியாத்தா...

தோட்டம் பெறளி இல்லே
தொரமேல குத்தமில்லே
கங்காணி மார்களாலே
கனப்பெறளி யாகுதடா'

அந்தோ அவள் மன நிலேயை இந்தப் பாடல் மூலம் அறிவித்தாள் தன் குல தெய்வமாகிய மாரியாத்தாவிடம். ஆம். அன்பின் மிகுதியாலோ என்னவோ பெண்பால் தெய்வத்தைக்கூட ஆண்பால் விகுதி சேர்த்தழைத்தாள். அம்மையும் அப்பனும் அவளாகத்தானேயிருந்தாள் நல்லதும் அவளால் கெட்டதும் அவளால்தானே வந்தது என்பது அவளின் நம்பிக்கை ஆம் இந்தப் பாடல் அந்த மெல்லியாளின் வாயி

விருந்து வந்தது. அது அந்த மாரியாத்தாளுக்குக் கேட்டதோ இல்லையோ. ஆனால்...

அந்தப் பொழுது விடியும் நேரத்திலேயும் அவள் பின்னால் வந்துகொண்டிருந்த அந்த இளம் உருவத்தின் காதுகளில் விழுந்தது. யாரது அவள் பின்னாலேயே தொடர்ந்து வந்தது! அவனது தோற்றம். ஏன்?

அவனது தோற்றம் அழகான தோற்றம்தான். ஆம் கையில் குடையிருந்தது. ஓ! அதுதான் கங்காணியின் 'டிரேட் மார்க்' ஆயிற்றே. கறுப்பு நிறக் கோட்டு. முண்டாசு. முறுக்கிட்ட மீசை. நாளும் எண்ணெய் போடுவார்களோ என்னவோ? அப்படி இருந்தது ஆட்டுக்கடாவின் கொம்புபோல சற்றே காவி படிந்த வெள்ளை வேட்டி. உள்ளுக்குள் வெள்ளை 'கமிசை' கழுத்தைச் சுற்றி 'மப்லர்', இடுப்பிலே வெற்றிலைப் பை வலது கையிலே ரிஸ்ட்வாட்ச். இத்தியாதி, இந்தியாதி. கண் கண்ட கங்காணியேதான். அப்படி என்றால் அவளைத் தொடர்ந்து அந்த விடிந்தும் விடியாத நேரத்திலே அவள் பின்னுக்கே வந்தானா என்ன! வந்துதானே இருக்கிறான். உம்...

பேச்சுக்கொடுக்கவேண்டியிருந்தது அவளிடம் எப்படிப் பேச்சுக் கொடுப்பது? என்ன செய்வான். ஏதாவது சொல்லியாக வேண்டும். அவளிடம் என்னத்தைக் கேட்கிறது? சும்மா கேலியாகப் பேசத் தொடங்கினான். ஆம் சற்று யோசித்தான். அவள் வருகிற வழியில் பொறுக்கி எடுத்துத் தன் கொண்டையிலே சூடிக்கொண்ட மலரைப் பார்த்த விட்டான். அவளின் கறை படிந்த பல்வரிசைதான் அவள் வெற்றிலை போடும் ஆசாமியென்று பறைசாற்றிக்கொண்டிருந்ததே. அவனும் இவைகளை அவதானிக்கத்தொடங்கினாள். இப்படி

'வாட வெத்தில வதங்க வெத்தில
வாய்க்கி நல்லால்லே
நேத்து வச்ச சந்தனப் பொட்டு
நெத்திக்கி நல்லால்லே



குருவி கொத்தின அரளி பூவு
கொண்டைக்கி நல்லால்லே
எங்குயிலு நடந்து போற போக்கு
மனசுக்கு நல்லால்லே..'

என்று முடித்தான்.

அவளுக்கும் ஏதோபோல் இருந்தது. உம்' தான் அரளிப் பூவைப் பொறுக்கி எடுத்துத் தலையில் வைக்கும்போது பார்த்துக் கொண்டே தனக்குப் பின்னாலேயே வந்திருக்கிறான். என்று எண்ணிய அவள் கோபம் கொள்ளவில்லை. மாறாக, உள்ளத்தில் கொண்டாள் ஒருவித 'கிளுகிளுப்பு'. ஆம். இவளைப்பற்றித்தானே இத்தனை நேரமும் கனவு கண்டுகொண்டு தவழ்ந்து வந்தாள். அந்தத்தோட்டத்துக்குப்பைக்கொடியாள் அவளும் இதற்கு மாற்றாக ஏதாவது சொல்லவேண்டுமென்று வாயெடுத்தாள். உடனே அவளுக்கு அவன் வழக்கமாக அணிகின்ற கைக்கடிகாரம்தான் ஞாபகத்துக்குவந்தது. அல்லாமலும் அவர்கள் இருவரும் காலம் கிடைத்த நேரங்களில் பகிர்ந்து கொள்கின்ற வெற்றிலைப் பையும் ஞாபகத்துக்கு வந்துவிட்டது. உடனே அவளும் அவனைக் கேலி செய்யுமுகமாகத் தொடங்கினாள்... இவ்வாறு

'சுண்ணாம்பு டப்பி கட்டி
சுத்திவாற சுங்காணி
கையிலே கொடையெடுத்து
கண்ணடிக்கிறதென்னா நீ

கோபப்படுகிறாளோ என்றாள் அதுதான் இல்லை. எப்படித் தெரிகிறது. இப்படி? ஆம் அவள் பாடியபோது உபயோகித்த சொற்களைப் பாருங்களேன்; அவன் கையில் கட்டியிருக்கிற கைக்கடிகாரம். சுண்ணாம்பு டப்பியாம் ஆகா, என்ன நயம் காணப்படுகிறது. அந்தச் சொற்களில், சுண்ணாம்பு டப்பியில் சுண்ணாம்பையிட்டு, அது கொஞ்சம் காய்ந்திருக்கும்போது அதிலே கொஞ்சம் தண்ணீர் விட்டால் எப்படிச் சத்தம் கேட்கும் தெரியுமா? டிக் டிக் டிக் டிக் என்று ஒலி கிளம்பும்ல்லவா? அதுபோல, அத்தாவது அந்தச் சுண்ணாம்பு டப்பி

யைப் போல வடிவம் கொண்டு டிக் டிக் டிக் டிக் சென்று சத்தமும் எழுப்பிக் கொண்டிருக்கிறது அந்தக் கைக்கடிகாரம் என்னே கற்பனை வளம் எத்துணை உவமைச் சிறப்பு!

இதைக் கேட்டவுடன் கங்காணிக்கு என்ன சொல்லுவதென்றே தெரியவில்லை. ஆனாலும் சும்மா கோபம் வந்தது போல் காட்டிக்கொண்டான். முறைத்துப் பார்த்தான். உம் ஒன்றும் நடக்கவில்லை. ஆதலின் கோபத்தை வெளியிட வேண்டுமே! ஏதாவது சொல்லவேண்டுமென்று நினைத்தான். உடனே கோபம் வந்ததுபோல் முகத்தைச் சுழித்துக் கொண்டு சொல்லுவான்

'மட்டக் கொழுந்துக்காரி
மடமடத்த சேலைக்காரி
மடத்தனத்த விட்டுப்புட்டு
குடித்தனத்த பாரடி கண்ணு'

ஆமாம் என்னதான் கோபத்தைக் காட்டிக்கொள்ள நினைத்தாலும் தன்னை அறியாமலேயே அந்தக் 'கண்ணு' என்ற சொல் வாயில் வந்துவிட்டது. இந்தச் சொல்லுக்காகத் தானே அந்தக் கொடியிடையாளும் காத்திருந்தாள்.

அவள் மீண்டும் தான் கொண்டிருந்த அதே தொனியில், ஆம், தான் முன்னால் என்ன கூறினாளோ அதையே கொஞ்சம் மாற்றிக் கொஞ்சும் குரலில் அஞ்சுகம்போல மிழற்றினாள் இப்படி. கேலியோடு காதல் கலந்து வாலிப மனத்தை ஈர்க்கும்படி சொன்னாள். அந்த மெல்லியலாள்...

'ஓட்டை ஒருலோசி
ஒடிஞ்சியொரு பேனாக்கத்தி
நேரம் கண்டு வேலைவிடும்
நேசமுள்ள கங்காணியே!
நாட்டுக்கு நாடுமட்டம்
நாமிருவர் ஜோடி மட்டம்
ஜோடியாக நாமிருந்தால்
சோறு தண்ணி கேட்டிடுமோ?



ஆமாம் துடிக்கும் நெஞ்சுடன் துடியிடையாள் சொல்லி முடித்தாள். 'ஜோடியாக நாமிருந்தால் சோறு தண்ணி கேட்டிடுமோ? என்று. அந்நேரத்தில் என்ன சொல்வான் அவன்.. ஆம்..

இடை நுடங்க நடை பயின்றாள் அவள். இன்பம் துய்க்கப் பின் தொடர்ந்தான் அவன் ஆனால் அவன் வாய் திறந்து பேசவில்லை. மௌனியானான். காரணம். அவள் பேசாது நடந்தாள். தான் சொன்னதில் ஏதாவது பிழை உண்டோ என்று அப்பொழுதுதான் யோசித்தான், அவன் ஏன் ஒன்றும் பேசாமல் இருக்கின்றான். அவளுக்கு அது விளங்கியிருக்க முடியாது. அவன் மனமோ இப்பொழுது அவள் வீட்டைச் சுற்றி வட்டமிடத் தொடங்கியிருந்தது நன்றாக விடிந்தும் விட்டது.

# 2

கறுப்பண்ணன் – ஆம். அவன்தான் நம் கதாநாயகன். அந்தக் கங்காணி, முத்தம்மாவை சுற்றி வந்த அவன் ஏன் மௌனியானான் என்பதை முத்தம்மாவாலேயும் கண்டு கொள்ள முடியவில்லை. முத்தம்மாள் முன்னால் நடந்து சென்றாள். இவள் வீடு கீழ்க்கணக்கில் இருந்தது. அவளின் காதலனாகிய கறுப்பண்ணனின் காம்பராவோ மேல் கணக்கில் இருந்தது. டிவிசனும் வேறுதான். ஆனால் கொஞ்சக் காலமாகத் தான் கறுப்பண்ணன் கீழ்க்கணக்குக்கு வந்து குடியேறி இருந்தான். எப்படிப் பார்த்தாலும் புதுப் பழக்கம்தான். மூன்று மாதங்களுக்கு முன் முத்தம்மாளுக்கு கறுப்பண்ணன் முற்றாகத் தெரியாதவன்தான், மற்றபடி, முறைப்பெண் போல் இருக்கிறது என்று என அருமை நேயர்கள் எண்ணிவிடக் கூடாது. இந்த நேரத்தில்தான் நாமும் கொஞ்சம் பின் நோக்கிச் செல்ல வேண்டியுள்ளது. ஆம் கறுப்பண்ணனின் வாழ்க்கையில் கொஞ்சம் ஏடுகளைமுன்னுக்குப் புரட்டவேண்டியுள்ளது.

கறுப்பண்ணனுக்கு சுமார் முப்பது வயதிருக்கும். கங்காணி என்றவுடன் ஏதோ நரைத்த மீசைக்காரன் என்று

நினைந்து விடவேண்டாம். இளவயதிலேயே அவன் கங்காணியான தற்குக் காரணம் உண்டு. அவனின் தந்தையாகிய கங்காணி காளிமுத்து அந்த பன்வத்தைத் தோட்டத்தில் சுமார் முப்பது ஆண்டுகள் 'சர்வீஸ்' உள்ளவராகயிருந்து சென்ற வருடம் தான் மண்டையைப் போட்டார். அந்த காரணத்தால் தான் கருப்பண்ணன் கங்காணியானான். அவன் தாய் ஒரு காலத்தில், அவன் கண்டானே முத்தம்மா அவளைப் போல் வேலை செய்தவள் தான். பேர் தான் கருப்பாயி. ஆனால் பார்ப்பதற்கு சிவப்பாய் இலட்சணமாயிருப்பாள். அப்படிப்பட்டவள் கூடைமேல் கூடைவைத்து கொழுந்து பறிக்கப் போகிற போது, கண்டு கிறுகிறுக் காதிருக்குமா? கங்காணி காளிமுத்துவின் வாலிப உள்ளம்! ஏன்? ஒரு நாள் அவள் தனிமையில போகும்போது கேட்டாரே இப்படி...

கூடமேலே கூடவச்சி
கொழுந்தெடுக்கப் போற பெண்ணே
கூடய இறக்கி வச்சி
குளிர்ந்த வார்த்தை சொல்லிப்போடி...

இதைக் கேட்ட அந்தக் கருப்பாயி கண் கொட்டாமல் அவரைப் பார்த்தாள். தன் நிலை இந்த ஆம்பிளைக்குத் தெரியாது போலிருக்கிறது? என்று எண்ணினாள். ஆம் அந்நேரம் அவள் மணமாகியிருந்தாள். தோட்டத்துக்குப் புதிதாக வந்திருந்தாள். கணவனோ தன் தாய்நாடாகிய இந்தியாவில் இருந்தான். அவனுக்கு அங்கு நல்ல வேலையிருந்தது. அங்கு மணல் காடு என்னும் பகுதியில் கடற்கரையில் சிப்பிகளைப்பொறுக்கி எடுத்து, உலையிலிட்டு அவித்து, சுண்ணாம்பு செய்து விற்று வந்தான். ஆகையால், அவன் சென்ற இரண்டு ஆண்டுகளாக இந்தப் பக்கமே வரவில்லைதான். கருப்பாயிக்கும் ஏதோபோலத்தான் இருந்தது. இந்த நேரத்தில் இந்த விளக்கம் எல்லாம் இவனிடம் 'ஏன் சொல்வான் என்று நினைத்தாள். நினைத்தவள் தொடங்குவாள் இப்படி

கூடையை இறக்கமாட்டேன்
குளிர்ந்த வார்த்தை சொல்லமாட்டேன்



கொண்ட கணவன் கண்டால்
கோப்பிக் கத்திலயை தூக்கி வருவான்...

என்றாள்.

ஓ... ஓ... இவள் மணமானவள் என்று அறிந்து கொண்டார் கங்காணி காளிமுத்து. சரி இருக்கட்டும், என்று அன்றையப் பாட்டுக்கு ஒன்றும் பேசவில்லை ஆனால், காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றது. மூன்று ஆண்டுகள் முற்றாக முடிவடைந்துவிட்டன. ஆனால் கருப்பாயின் கணவனைப் பற்றிய ஒரு செய்தியுமே இல்லாமல் போயிற்று. அவள் மனமும் கொஞ்சம்கொஞ்சமாக மாறியது. வாலிப உடலும் உள்ளமும் எத்தனை நாளைக்குத்தான் தாக்குப் பிடிக்கும்?, ஏதோ ஒன்றை நினைத்து ஏங்கித் தவித்தாள். ஆம், அவளே கொஞ்சம் கொஞ்சமாக பாலை ஒழுகவிட்டாள்; பன்னீரை சிந்தவிட்டாள். ஆம தன் கணவனை மறக்கத் தொடங்கினாள். கல்யாண நேரத்தில் ஊட்டப்பட்ட பாலை மறந்தாள்; பன்னீரைத் துறந்தாள். பின் என்ன செய்தாள்? வாசமுள்ள புது சவுக்காரமிருந்தது அவளிடம் இப்போது. அதை வந்தவருக்குத் தானமிடத் தொடங்கினாள். ஆமாம் அவளே சொல்கிறாள் இப்படி இதோ அவள் வாயாலேயே சொல்லட்டுமே...

பாலை ஒழுக விட்டேன்
பன்னீரைச் சிந்தவிட்டேன்
வாசமுள்ள சவுக்காரத்தை
வந்தவர்க்குத் தானமிட்டேன்...

ஆகா, தான் செய்யும் அந்தக் காரியத்தை எவ்வளவு லாவகமாகச் சொல்லுகிறாள், பார்த்தீர்களா? இதற்கு மேல் நடந்ததை நான் சொல்ல வேண்டுமா என்ன? ஆம கங்காணி காளிமுத்துவும், கருப்பாயியும்தான் நம கதாநாயகர் கங்காணியின் தாய் தந்தையர்கள் ஆனார்கள்.

தந்தை சென்ற வழியில் தாயனும் செல்ல வேண்டும் என்ற நியதி உண்டா என்ன, இல்லையே! வேலை விசயத்தில் தான் அப்படியென்றால் இந்தவிஷயத்திலும்அப்படியே இருக்க வேண்டுமா என்ன? இல்லை. ஆனால், இங்குதான் கதைகொஞ்சம் மாறியிருக்கிறது. ஆச்சரியப்படவேண்டாம்,நம் கங்காணி காளிமுத்துவின் மகன் கங்காணி கறுப்பண்ணன் கல்யாணமானவன். அவன் கட்டியிருந்த மனுசியின் பெயர் மீனாட்சி. இந்த விசயம் நமக்கு இப்பொழுது தெரியும். ஆனால் நம் கதாநாயகி முத்தம்மாவுக்கு இந்த விசயம் இன்னும் தெரியாது. கங்காணி கறுப்பண்ணனின் கதையைச் சொல்லப் போனால் அது பெரிய கதை போங்கள். என்ன செய்வது சொல்லித்தானே ஆகவேண்டும். அதாவது...

பாட்டுக்கு பணிய லயம்
பந்தடிக்க மேட்டு லயம்
பேச்சுக்கு பீலிக்கரை
வாச்சிதையா மன்னனுக்கு

ஆம். சுருங்கச் சொன்னால் கறுப்பண்ணனின் வாழ்க்கை மேற் சொன்னவாறு ஓடிக்கொண்டிருந்தது. அவன் தாயுந் தந்தையும் வேலை செய்ய, அவன் வாலிபப் பருவம் அடைந்த காலத்தில் இப்படித்தான் நடந்துகொண்டான். காலையில் எழும்புவான். தன் அன்றாடக் கடமைகளை முடிப்பான். பின் பணிய லயத்துக்குப் போய்விடுவான். அங்கு அவனின் வயதொத்த இன்னும் இரண்டு நண்பர்கள் இருந்தனர் அவர்கள் பெயர்கள் அங்கப்பன், ராஜவேல் இருவருமே கலைகளில் கொஞ்சம் கரிசனை காட்டியவர்கள். இந்த மூன்று பேரும் ஒன்றாகச் சேர்ந்துவிட்டால்ஒரே பாட்டுதான். ஆம். எல்லாம் சினிமா பாட்டுகளாகத்தான் பாடித்தள்ளுவார்கள். காலைப் பொழுது இப்படிக்கழியும். பகலைக்கு வந்து வீட்டில் சாப்பிடுவான். பின் மறுபடியும் வெளியேறிவிடுவான்; மாலையில் அவன் போவது மேட்டுலயத்திற்கு. அங்குபோய்; சில வாலிபர்கள் பந்தடிப்பார்களே அவர்களுடன் சேர்ந்து பந்தடித்துவிட்டு .. மூகங் கைகால் கழுவவேண்டுமே, நல்ல நேரம் பார்த்து



பீலிக்கரைக்குச் செல்லுவான். ஆம். நல்ல நேரம் தான் என்னவில், அவன் சரியாக வேலைவிட்டுப் பெண்கள் தங்கள் கைகால் சுத்தம் செய்து கொள்ள குளிக்க பீலிக்கரைக்கு வரும் நேரம் பார்த்துத்தான் அங்குபோவான். பீலிக்கரைக்கு அந்நேரம் போனால் சும்மாவா இருப்பான். ஒரே பேச்சும் கூப்பாடும்தான். அங்கு வருகிற பெண்கள், குமரிகள், ஆண்கள், வாலிபர்கள் யாவருடனும் அளவளாவுவான். கங்காணியின் மகன் என்றவுடன் கணிசமான அளவு மரியாதை கொடுக்கத்தான் செய்தார்கள். ஆகையால், இவனும் மன்னன்போல் உலாவந்தான், இப்படி வரும்போதுதான் ஒரு நாள்,

மங்கிய மாலை நேரம். இவன் பாடிக்கொண்டு வருகிறான் ஒரு மெல்லிடையாள் குளித்துவிட்டு அவன் முன்னால் செல்கிறாள்...

பொட்டுமேலே பொட்டு வச்சி
பொட்டலிலே போறத் தங்கம்
பொட்டலிலே
பெஞ்ச தண்ணி உன்
பொட்டுருக பெய்யலியே

ஆமாம், உண்மைதான். அவள் அந்தப் பீலிக்கரையில் குளித்துவிட்டு, சாயச்சீலை தன் வாளிப்பான உடலில் ஒட்டிக் கொண்டு உறவாட, அவன் வாலிப மனதைப் பிடித்துத் தின்ன, சிங்கார நடை நடந்து போனாள். 'அப்படியென்றால் அந்தப் பொட்டு எப்படி இன்னும் அழியாமல் இருக்கிறது. என்பது அவன் எண்ணம். உம். நேரிலேயே கேட்டுவிட்டான். ஆமாம். ஒவ்வொரு நாளும் நான் குளிக்க வரும்போது அவன் பொட்டுத் தூளும் கையில் கொண்டு வருவாள் என்பதை இவ் வாலிபன் எப்படி அறிவான். அறிந்திருந்தாலும் அவளுடன் பேசுவதற்கு எதாவது ஒரு காரணம் வேண்டும்தானே. சரி, கேள்விதான் கேட்டாகி விட்டதே. பதில் இல்லையே! அவளோ... புன்னகை பூத்துக்கொண்டு நாணிக் கோணிக்

கொண்டு நடக்கத் தொடங்கினாள். அப்படி நடக்கும்போது சில வளைவுகளில் வளைந்து வளைந்து செல்லவேண்டி இருந்தது. அப்படிச் செல்லும்போது அவளின் வலிவுடலின் வளைவுகள் அவன் இதயத்தை ஈர்த்தது. அவன் கட்டியிருந்த சேலையும், அங்கும் இங்கும் இழுபட்டு அசைந்து ஆலவட்டம்போட்டது. மறுபடியும் பேச்சு கொடுக்கப் பார்த்தான். அவன் சொல்லுவான்

வட்டவட்ட பாதையிலே
வளைஞ்சி வளைஞ்சி போகையிலே
யார் கொடுத்த சாயச்சீலை
ஆல வட்டம் போடுதடி...

ஆமாம் ஒரே கல்லில் இரண்டு இளங்கனிகளை வீழ்த்தப் பார்த்தான் அவன். பேச்சு கொடுக்கும் அதே நேரத்தில் அவள் மணமானவளா என்பதை தான் சேலை ஒன்று வாங்கித் தரலாமா? என்றும் கேட்கும் தொனியில் சொன்னான். அதாவது தன் காதலை வெளியிட்டான். அப்பொழுது அவளுக்கு சூடு பிடித்தது; கங்காணி மகன் கிடைப்பது லேசா என்ன? அவன் கேட்ட கேள்வியின் உள்ளார்த்தத்தை நன்கு அறிந்து கொண்டாள் அவள். 'இதற்குத் தகுந்த பதில் சொல்ல வேண்டுமே நான் ஒப்புக்கொள்கிறேன் என்பதை சொல்லாமல் சொல்ல வேண்டுமே. எப்படிச் சொல்வதென்றுஒருமுறை எண்ணினாள். அத்தோடு இத்தனைக் காலமும் ஒரு அந்நியனுடனும் பேச்சு வைத்துக்கொண்டதுமில்லை என்பதையும், வெளியிட நினைத்தாள். தான் தனியாக மிக மிகக் கஷ்டப்பாடு படவேண்டியிருக்கிறது, இந்தப் பாட்டிலிருந்து என்னை விடுவிக்க வேண்டும்' என்றும் தொனிக்கும்படிச் சொல்ல எண்ணிச் சொல்வாள்...

யாரும் கொடுக்க வில்லை
அந்நியரிடம் சம்பாரிக்கயில்லை
கஷ்டப்பாடு பட்டல்லோ
கட்டினன்டா சாயச்சேலை



அவனுக்கும் விளங்கிவிட்டது. மெல்ல புன்னகை செய்தான். அவன் எதிர்பார்த்த பதில் கிடைத்துவிட்டது. விடுவானா என்ன? மீண்டும் தொடங்கினான் தான் ஒரு கற்பனை உலகில் சஞ்சரிக்கத் தொடங்கினான். அவளை என்னென்ன விதத்தில் புகழ்வது என்பதே அவன் எண்ணமும் கருத்துமாயிற்று. நான் ஏன் சொல்வான் அவன் சொல்வதை கேளுங்களேன்.

சின்ன சின்ன வெற்றிலையாம்
செட்டிக்கடை மிட்டாயாம்
மார்கட்டு மரிக்கொழுந்தாம்
மணக்குதடி கொண்டையிலே

ஆகா. எவ்வளவு அழகாகத் தன் காதற்கிழத்தியை வர்ணிக்கிறான் பாருங்கள். அவனுக்கு நன்கு பரிச்சயமான பொருட்களை ஆதாரமாக வைத்துக்கொண்டே சொல்வது எவ்வளவு அழகு மிளிர்வதாய் உள்ளது- அவளும் இதற்கு ஏதாவது சொல்லி அவனை சந்தோசப்படுத்த வேண்டும் என்று நினைத்தாள். அப்பொழுது அவனின் அழகு அவள் கண் முன் நிழலாடியது. அவனின் சுருண்ட மயிர் அவளை நன்றாகக் கவர்ந்திருந்தது. அவனின் அந்த கூர்மையான பார்வை ஐயோ! எத்தனை நாள் அவன் பீலிக்காயிலிருந்து தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறாள். அந்நேரமெல்லாம் ஏதோ ஒருவித மின்சார உணர்ச்சித் தன் உடலெங்கும் ஓடுவது போல் உணர்ந்திருக்கிறாளல்லவா? அவன் வெற்றிலை போட்டதினால் கறையேறிப் போயிருந்த அந்தப் பல்வரிசையில் ஏதோ ஒரு கவர்ச்சியிருப்பதை அவள் உணர்ந்துதானே இருந்தாள். ஆக அவளும் வாயெடுத்தாள் சொல்வதற்கு

உருண்ட மூடி அழகா, உல்லாச கண்ணழகா
ஈச்சங்காய் பல்லழகா, எம் மன்ன மன்னவரே

ஆமாம். இந்த ராணிக்கு எற்ற மன்னன் நீதான் என்பதை வற்புறுத்தினாள் அந்தத் தோட்டத்துத் தோகை மயிலாள். அவன் என்ன சும்மா விடுவானா? தனிமையான நேரம்

குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. மாலைப் பொழுது, மங்கலான முன்னிரவு நேரம் என்றுகூட சொல்லலாம். அந்நேரத்தில் அவன் எதிரே அவனை இத்தனைக் காலம் மயக்கிய மங்கை நல்லாள், நிற்கிறாள் தனிமையாக. விருப்பத்தை வெளியிட்டுவிட்டு அவன் அவளைநெருங்குகிறான் அந்நேரம்...

அந்தப் பக்கமாக யாரோ வரும் அரவம் கேட்டது. தயங்கினான் அவன். அங்கு வந்தது யார் ஓ ஓ. 'நம்ம வெள்ளையம்மாவா, வா. வா வா என்ன வெள்ளையம்மா, ஒங்கிட்ட கொஞ்சம் சுண்ணாம்பு இருக்குமா? இந்த பொடிச்சி லச்சுமிகிட்ட இல்லியாம். இருந்தா கொஞ்சம் தாவேன், என்றான் ஒன்றும் தெரியாதவன்போல் கறுப்பண்ணன், ஓ. ஓ சுண்ணாம்புதான் கேட்டுக்கிட்டிருக்கியா உம்... இந்தா சுண்ணாம்பு என்று தன், வெற்றிலை 'பக்கறை' எடுத்து அதில் ஒரு டப்பியிலிருந்த சுண்ணாம்பை எடுத்துக் கொடுத்தாள் வெள்ளையம்மா. அவளும் குளித்துவிட்டுத் தன் லயம் நோக்கித்தான் போய்க்கொண்டிருந்தாள். அவள் இருந்ததும் நம் லச்சுமியிருந்த அதே லயத்தில்தான். கடைசி காம்ராவில். அவள் போய்விட்டாள் லச்சுமிக்கு ஏதோபோல இருந்தது. இந்த வெள்ளையம்மா பெரிய வாயாடியாயிற்றே சூதுக்கார வெள்ளையம்மா இல்லியா அவள். அவள் போய் என்னென்ன சொல்லி வைக்கப்போகிறாளோ, என்று பயந்து, அவளும் கண்ணாலே குறி சொல்லிவிட்டு ஒரே ஓட்டமும் நடையுமாகப் போய்விட்டாள், தன் லயம் நோக்கி; கறுப்பண்ணனும் பயந்தானெனினும் அவனது புது அனுபவம் அவனை மகிழ்ச்சிக் கடலில் மிதக்கச் செய்தது ..

அடுத்த நாள் காலையில் வேலைக்கு வந்தவுடன் லச்சுமி வெள்ளையம்மாளைப் பார்த்துக் கேட்ட கேள்வியைப் பாருங்கள் ..

'சுத்து கம்பி சேலைக்காரி
சூதுக்கார வெள்ளையம்மா
சுண்ணாம்பு கேட்டதுக்கு
ஊத்திட்டியே தோட்டமெல்லாம்.



அடேயப்பா! அந்தத் தோட்டமெல்லாம் பரவிவிட்டது. இந்த நேற்று நடந்த சங்கதி. பெண்கள் வாய்க்கு அவல் கிடைத்தால் போதாதா என்ன! அதுவும் இப்படிப்பட்ட விடயம் என்றால் சும்மா விட்டு வைப்பார்களா என்ன! அதுவும் லச்சுமி 'நான் குற்றவாளி அல்ல. சும்மா சுண்ணாம்பு தான் கேட்டேன்' என்று சொன்னாள். நம்புவார்களா பெண்கள்-தோட்டத்து மக்கள், இந்த விடயம் தோட்டம் பூராவும் பரவிவிட்டது காட்டுத் தீ போல். அன்றைய தினத்திலேயே அன்று...

பீலிக்கரையில் சேர்ந்தது பெண்கள் கூட்டம். இன்று லச்சுமி இன்னும் வரவில்லை. வரும் நேரம் ஆகிவிட்டது. பெண்கள் கூட்டம் தங்களுக்குள்ளே அன்றைய தினத்தின் முக்கிய செய்தியாகிய கறுப்பண்ணன் - லச்சுமி பற்றிய விடயத்தை ஆராயத் தொடங்கியது. அந்நேரம் நம் லச்சுமி சாயச் சேலையுடுத்தி அங்கு வருகிறாள் சாயந்திர வேளையில், பீலிக்கரையில் தன் 'குளிப்'பை நடத்துவதற்கு வந்தாள். அந்த வேளையில் வெள்ளையம்மாள் லச்சுமிக்குப் படும்படியாகத் தொடங்கினாள். அவள் வெளிப்படையாகச் சொல்லாமல் சொல்கிறாள் இப்படி. ஆம், கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லையாம் லச்சுமிக்கு. வெள்ளையம்மாள் சொன்னாள்...

'சாயச் சவரச் சேல
சாத்தூரு கம்பி சேல
சுத்துக்கு எட்டலேன்னு
சிந்துறாளே கண்ணீர...

எவ்வளவு லாவகமாகச் சொல்லிவிட்டாள், பாருங்கள். சுத்துக்கு எட்டவில்லை என்று கண்ணீரைச் சிந்துகிறாளாம் லச்சுமி. ஆமாம், கண்ட பொருள் கையில் வந்து அகப்படாத போது அழாமல் என்ன செய்வாள். இதற்கு இன்னும் பக்க தாளம் போடுவதுபோல இன்னொருத்தி தொடங்கினாள். அவளும் என்ன. வெந்த புண்ணில் வேல் நுழைக்கத்தான் பார்த்தாள். நம் லச்சுமிக்காக, முட்டையிட்டு சுட்ட பணியாரம்,

நல்லநமைபான கோழிகூட்டு வாழைப்பழம், தேனால் செய்யப்பட்ட தினி இவையெல்லாம் கிடைத்திட இருந்தன ஆனால். இவைகளை கையில் எகித்து வாயில் இட்டுச் சாப்பிடாமலேயே அவள் திருடிச் சாப்பிட்டாள் என்று கெட்ட பெயர் எடுக்கவேண்டியதாயிற்று என்ன செய்வாள்! பாவம், இந்த கருத்துப்பட இன்னொருத்தி மிக அழகாகச் சொல்வதைப் பாருங்கள்...

'முட்டபோட்டு சுட்டரொட்டி
மொத நம்பர் கோழிக்கூட்டு
தேனால செய்த தினி
திங்காம பேரெடுத்தேன்!

இது. சரியாக லச்சுமி முதலில் அந்த சுண்ணாம்பு கேட்டகற்த தூத்திட்டிச்ய தோட்டமெல்லாம்? என்று சொன்னதற்குப் பதில் சொல்வது போல இருந்தது. 'அடேயப்பா, ஆளப் பாரு ஆா, கன்னிப் பெண்ணு. இவளுக்கு ஒன்னுந் தெரியாது. இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்ற தோரணையில் பேசுவதைப் பாரு. ஒன்று தொடங்கினாள் ஒருத்தி, அவளும் தன்னின் சுடு சொற்களால் லச்சுமியைச் சுட்டுப் பொசுக்கத் தொடங்கினாள். அவள்சொன்னது லச்சுமியின் மனசைப் பெரிதும் வருத்தியது. இதுவரையும் பீலிக் கரையில் நின்று குளித்துக்கொண்டு. இருந்த லச்சுமி தன் ஈர உடையை மாற்றிக் கட்டிக் கொண்டாள். ஒற்றைப் பட்டையாகக் கட்டிக்கொண்டு முந்தானையை எடுத்துப் போர்த்திக்கொண்டாள் அவளின் வாளிப்பான உடல் அந்த ஈர உடையின் ஊடாக அழகைக் கொட்டிக்கொண்டிருந்தது செதுக்கப்பட்ட சிலைபோல் காட்சி தந்தன. சில வளைவுகளும் நெளிவுகளும், ஆம் அந்தக் கடைசிப் பெண் சொன்னது இது தான். லச்சுமியின் மனதை சுட்டெரித்தது இதுதான்.

ரோட்டோர வீட்டுக்காரி
ரோசாப்பூ வேலக்காரி
காதோரக் கொண்டைக்காரி
காரியத்தில் கெட்டிக்காரி



இந்த 'காரியத்தில் கெட்டிக்காரி' என்று சொல்லப் பட்டதுதான் அவளைப் பெரிதும் வருத்தியது. 'காரியத்தில்' என்று சொன்னது மிக மிக மனதை வருத்தியது. 'காரியம்' என்பது மிகவும் மோசமானதல்லவா என்று எண்ணினாள் எண்ணிக் கொண்டே நடக்கத் தொடங்கினாள். ஆம் இன்று பொட்டு கூட இட்டுக்கொள்ளவில்லை காலையில் கோபத்தோடு வந்த அவசரத்தில் பொட்டு எடுத்துக் கொண்டு வரக்கூட மறந்துவிட்டாள். கோபமும் மனவருத்தமும் அன்றாட வேலையை முற்றாக மாற்றிவிடும் தானே? தன் செய்கையில் தடுமாற்றத்தைக் கொணரும் தானே செய்வதே இன்னதென்று தெரியாது தானே! அவசர அவசரமாக நடக்கத் தொடங்கினாள் தன் வீட்டை நோக்கி ஆனால், ஈரப் புடவை அவள் நடையைத் தடுத்தது. சேலை முழங்காலுக்குச் சற்றே மேலேயிருந்தாலும்கூட அதிலிருந்த நீர்ப்பசை அவள் நடையைக் கட்டுப்படுத்தியது.

அவள் சற்று தயங்கித் தயங்கியே நடந்தாள். ஏன் அப்படி? ஆா. இன்றும் அவன் வழியில் அகப்பட்டுக் கொள்ளக்கூடாது என்று எண்ணினாளோ என்னவோ. அவள் நினைத்தது நடக்கத்தான் செய்தது. ஆம். அவன் அதே 'லெக்கில்' இருந்தான் வருமீன் வருவரையும் காத்திருந்தான். வந்தது மீன். நீரில் விளையாடித்தான் வந்தது. ஆனால் அந்தக் கயல்விழியில் சோகம் கப்பிக் கிடந்தது. அவனோ அதைப் பற்றிக் கவலைகொள்ளவில்லை. அவள் வருவதைக் கண்டவுடன் பின்னாலே வந்து தன் கையில் வைத்திருந்த மலர்க்கொத்தைக் காட்டி, 'லெக்சுமி' நீ தேந்து வச்சிருந்த அரளிப் பூவு நல்லா இருக்கல்ல. அதனாலே இதோ பாரு...

கொத்தமல்லித் தோட்டத்திலே
கொழுந்து கிள்ளப் போற பெண்ணே
கொண்டு வந்தேன் மல்லிகைப் பூ
கொண்டையிலே சூட்டிவிட'

இதைக் கேட்டவுடன் அவளுக்கு ஆச்சரியமாயிருந்தது. மோகம் இருந்தாலும் சிந்திக்கத் தொடங்கினாள் 'இவன் ஏன் நாம் இந்தப் பன்வத்தைத் தோட்டத்திலிருக்க கொத்த மல்லித் தோட்டம் என்று சொல்கின்றான். அங்கே கொழுந்து கிள்ளப் போறேனாமே' என்று ஆச்சரியப்பட்டாள், அவள் தயங்கி நிற்பதைக் கண்ட கறுப்பண்ணன், 'லக்சுமி' ஒன்னு சொல்றன், இன்னக்கி காலையிலே உன்ட அப்பாவ கண்டன். எல்லா விடயமும் கேட்டாரு. நானும் உண்மைய சொன்னன். ஆனா, அவரு இந்தத் தோட்டத்து ஆள்களுக்குப் பயந்து நாளைக்கே கொத்தமல்லித் தோட்டத்துக்குப் போசப் போறேன்னு சொன்னாரு. உன்னையும் கூட்டிக்கொண்டு தானே போறாரு அதுதான் அப்படிச் சொன்னேன்' என்றான். உடனே அவளுக்கு விளங்கி விட்டது. மனம் வருந்தினாள் ஏதோ தன்னைக் கொஞ்சம் தேற்றிக்கொண்டு அவளும் சொல்லத் தொடங்கினாள்...

'கண்ண நிறைஞ்ச மச்சானுக்கு
கழுத்து நீட்டக் காத்திருக்கன்
குங்குமமும் மல்லிகையும் எனக்கு
குறையாமல் கெடச்சிடுமா...?

என்று கேட்டாள். இது, அவனை சாந்தப்படுத்துவதற்காகவே கேட்டாள். சும்மா கேட்டு வைத்தாள்; அவள் மனதில் அந்நேரம் சோகம் கப்பிக் கிடந்தது உண்மையே, அவளின் நிலையும் அப்படித்தான் இருந்தது. என்பதை அறிந்தே அவனைத் தேற்றுவதற்காகக் கூறினாள். இப்படி, அவன் மனம் சந்தேகப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்கு மாறாக அவளை ஏதோ ஒரு மாதிரிப் பார்க்கத் தொடங்கினான். பார்த்தவன் மனதில் எதையோ மிகவும் சிந்திப்பதுபோல் காட்சியளித்தான். அவள், அவன் சோகத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறான் என்பதை அறிந்து கொண்டாள். கேட்ட கேள்விக்குப் பதில் பெறுவதைப் பற்றியே மறந்துவிட்டாள் அவனே மீண்டும் தொடங்கினான்.



'நேசக் கிளியே எந்தன்
நெடும் இதழ்த் தாளம் பூவே
சொன்னால் பொறுக்குமா உன்
அப்பன சொன்ன வார்த்தைகளை'

இப்படி அவன் கேட்டான். இது அவளுக்கு இன்னும் வருத்தத்தைக் கொடுத்தது. ஏதோ பெரிய பேச்சுவார்த்தைகள் எல்லாம் நடந்திருக்கிறது என்று நினைத்தாள். என்ன நடந்திருக்க வேண்டும் என்று எண்ணிப் பார்த்தாள். அவளால் யூகித்துக்கொள்ள முடியவில்லை. என்ன நடந்தது என்று அறிய ஆவல் கொண்டாள். ஆதலால் தனக்கிருந்த வெட்கம், அச்சம் இவை எல்லாவற்றையுமே மறந்து அவனுடன் சரளமாகப் பேசத் தொடங்கினாள். மெல்ல அவள் பாவித்த சொற்களும் மாறத்தொடங்கின. ஆம், அவனை நல்ல அந்தத் தமிழ்ச் சொல்லாம் அத்தான் என்பதின் கொச்சைத் தமிழான மச்சான் என்று அழைக்கத் தொடங்கினாள். ஆம், அவள் கேட்டாள் இப்படி.

'கண்ணில் நெறஞ்ச மச்சான்
கருத்தை கவர்ந்த மச்சான்
என் அப்பன் தரும் தொல்லைகளை
என்னவென்று எடுத்துரைப்பாய்'

கண்ணில் நிறைந்து கருத்தை கவர்ந்தவன் அவன் என்று ஒப்புக்கொண்டாள், அந்தக் கன்னிப்பெண்மயிலாளும். அவன் அவளின் கருத்தை கவர்ந்து அவளின் அங்கமெல்லாம் நிறைந்திருந்தான். உனக்கு என் அப்பன் என்ன சொன்னான். 'உனக்காக என் அப்பனைக்கூட எதிர்க்கத் தயாராயிருக்கிறேன்' என்பது போல் இருந்தது அவள் கேட்ட தொனி, 'நீ என்ன சொல்கிறாயோ அப்படியே நானும் செய்கிறேன்' என்று அவள் வாய் திறந்தே சொல்லிவிட்டாள் என்றால் நாம் வேறு என்னத்தைக் கூறுவது. அவனுடன் வேறு எங்கேயாவது ஓடிப்போவதற்குக்கூட தயாராயிருந்தாள் அவள். எவ்வளவு தூரம் அவன் அன்பு கொண்டுவிட்டாள்.

கறுப்பண்ணன் லட்சுமியிடம் அவள் தந்தை சொன்னவைகளைச் சொல்ல முற்பட்டாள். அதாவது அவள் சொன்னது என்னவென்றால் லட்சுமி, ஒன் அப்பா ஒன்னையுங் கூட்டிக்கிட்டு நாளைக்கே இந்தத் தோட்டத்த விட்டுப்பட்டுப் போகப்போறேன்னு சொன்னாரு ஆனால் நான் அதுக்கு மறுப்புச் சொன்னனன். ஆமாம் நீ குத்தம் செய்யயில்ல நர்ன் தான் இதுக்கெல்லாம் கர்ரணமுன்னு சொன்னன் இதனால் தான் நாளைக்கே இந்தத் தோட்டத்த விட்டு கொழும்புக்குப் போறன்னு வெட்டு ஒன்னு துண்டு ரெண்டெங்கிறாப்போல் சொல்லிட்டன் அதாலதான் நீ இன்னக்கி வீட்டுக்குப்போகு முன்னால் ஒன்னய் இங்கின சந்திச்சி, விசயத்த சொல்லிட்டுப் போலாம்னு வந்தன்' என்றான்.

ஐயோ! அதை அவன் ஏன் தான் சொனானோ, ஆம் லட்சுமியின் கண்களிலிருந்து சுண்ணீர் இந்தப் பீலியிலிருந்து தண்ணீர் விழுகிற மாதிரி விழத் தொடங்கியது. பொல பொல என்று கொட்டியது. மனமுடைந்து போனால் மங்கை நல்லான். உடனே அவள் நெஞ்சம் குமுறுவாள்.

'ஆசை மச்சான் அருமை மச்சான்
அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான
உன் அழகான உடலினையும்
அழிக்க வந்த பாவி யாரோ

கறுப்பண்ணனுக்கு ஒன்றும் நடந்துவிடவில்லை தான். எனறாலும் அவள் மனம் அவ்வளவு தூரம் வருத்தியது. ஆதலால் தான் ஏதோ கனவு, திகில் சஞ்சரிப்பது போல், 'அங்கமெல்லாம் நெறஞ்ச மச்சான உன் அழகான உடலினையும் அழிக்க வந்த பாவியாரோ' என்று கேட்டுவிட்டாள். 'ஆம் நீ கொழும்புச் சீமைக்குப் போனா ஒன் உடம்பு துரும்பா போயிடும் ஏன் என ஒடம்பு எளைச்சி போயிடும் ஒன் ஒடம்பு எனனாத்துக்காகும்' எனறு கூட கேட்டுவிட்டாள் ஏன் கேட்க மட்டாள்? அவளே சொல்கிறாளே அவளின் அங்கமெல்லாம் நிறைந்த மச்சானும். அதற்கு மேல் அவள் வேறு எப்படிச் சொல்ல முடியும். தன உடலீன் ஒவ்வொரு அங்கத்திலும் உறைந்திட்டானும் அவன்.



பின், பிரிய முடியாமல் பிரிந்தனர். ஏனெனில், கருப்பண்ணன் தான் எப்படியும் நாளைக்குப் போகத்தான் போகிறேன் என்று விட்டான். போகுமுன், நாளையும் அவளை விடியற் காலையிலேயே சந்திப்பதாகச் சொன்னான். உடைந்த இரு உள்ளங்கள் உற்ற தம் வீடுகளை நோக்கிச் சென்றன திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே சென்றார்கள். பிணைப்பு அத்தனை தூரம் இருந்தது.

## 5

வீட்டுக்குப் போன லட்சுமி வீட்டில் ஒருவருடனும் பேசவில்லை. அந்நேரம் அவள் தந்தையும் காம்பராவில் இருக்கவில்லை. ஆனால், அந்நேரம் வெளியில் ஓர் உருவம் குடித்துவிட்டுத் தள்ளாடித் தள்ளாடி 'பாட்டுப் பாடவா பார்த்துப் பேசவா' என்று பாடிக்கொண்டு அவள் காம்பறாவை நோக்கி வந்தது. அது வேறு யாருமல்ல. அவளின் தந்தை மூக்காண்டி தான். நன்றாகப் 'போட்டிருந்தான்,' 'அவனிடம் ஒரே கசிப்பின் நெடி, அவன் படியில் கால் எடுத்து வைத்தானோ இல்லையோ; தொடங்கிவிட்டாள் லட்சுமியின் தாய். அந்தச் சொற்களை இங்கு எழுதலாமோ? சீ...சீ...சீ...வேண்டாம். அவனுக்கும் கோபம் வந்தது. உடனே...

'கஷ்டப்பட்டு சம்பாரிச்சு
நாலு ரூபாய்க்கு நான் குடிச்சா
கஷ்டம் ஒனக்கு என்னா
நாசமத்த...'

இப்படித் தொடர்ந்த சொற்களையும் நான் கூறவேண்டிய அவசியமில்லை. என அன்பிற்குரிய நேயர்களின் கற்பனைக்கே அதனை விட்டுவிடுகிறேன். இந்த நாசமத்த வசைமொழி லட்சுமியின் தாய் மருதாயை இன்னும் தூண்டிவிட்டது. அவள் தன் கணவனைத் தனக்குத் தெரிந்த 'நல்ல' சொற்களால் தொடர்ந்து 'கிழித்தாள்' லக்சுமி ஒன்றும் பேசவில்லை.

ஏனென்றால் இது வழமையாக நடக்கும் ஒன்றுதான், அதுவுமல்லாமல் இன்றைக்கு ஒன்றும் சொல்லும் நிலையிலும் அவன் இல்லை என்பது நாம் அறிந்தது தானே. மூக்காண்டிக்கு இன்னும் ஏறியது விடுவானா என்ன... தொடர்ந்தான்..

'உங்க அப்பனாட்டு காசா
உங்க ஆயா பணம் போச்சா
முணு முணுக்காத நாயே
மூடிக்கொள்ளடி வாய'

இந்த அதட்டலுக்குப் பயப்படுபவளா மருதாயி! அவள் அவளின் புராணத்தைத் தொடரத்தான் செய்தாள். அவளின் வசையாயணமும் வற்றாமல் தொடர்ந்தது. இப்படியே இவர்கள் இருவரின் கண்றாவி காலட்சேபம் தொடர்ந்ததால் லட்சுமிக்கும் நன்றாகப் போய்விட்டது. அவளைப்பற்றி ஒருவரும் பேசவில்லை. வழமையாக அவள் செய்யும் தண்ணீர் கொண்டு வரும் வேலையையும், ஆட்டுக்கு 'குழை' கொண்டு போடுதலையும் செய்துவிட்டு, பின் இரவுக்கானதை சமைத்துச் சாப்பிட்டுவிட்டு உறங்கிவிட்டாள். அவள் தாயும் யாருக்கு வந்த விருந்தோ என்று வாளாவிருந்துவிட்டாள்.

இன்னும் விடியவில்லை. லக்சுமி எழுந்தாள். நேற்றிரவு இருந்ததை குடித்தாள் தந்தை ஒரு கிழிந்த சாக்கில் கைகளையும் கால்களையும் விரித்துக் கொண்டிருப்பதைக் கண்டான். அவனை எழுப்பிச் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள் கூடையையும் தூக்கிக்கொண்டு, தாயே அவளுக்கு முன்னாலேயே போயிருந்தாள். தாய் அவளிடம் சொல்லாமல் கொள்ளாமல் போனது அவளுக்கு ஆச்சரியமாகவேயிருந்தது. வழக்கமாகப் போகும் வழியாகவே அவள் நடந்து சென்றாள்..

வழியில்...

கருப்பண்ணன் நின்றான். ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான் லக்சுமியை. லக்சுமி லாவகமாக நடந்து வருவதை கண்டதும் தான் அவன் மனம் கொஞ்சம் அமைதிப்பட்டது.



ஏனெனில் அவள் எங்கே இன்று வராமல் இருந்து விடுவாளோ என்று எண்ணியிருந்தான், ஒருவேளை அவள் தந்தை அவளை வேலைக்குப் போக வேண்டாம் என்று சொல்லிவிட்டிருந்தால் அவள் வராமல் தானே இருக்க வேண்டும் எது எப்படி என்றாலும் இப்பொழுது அவள் வந்து விட்டாள் தானே அது மட்டும் அவனுக்கு ஆனந்தம் தான். தன் மனம் இருந்த நிலையைக்கூட மறந்துவிட்டான். ஆம் அவளைக் கண்டவுடன் அவன் மனம் அவ்வளவு மகிழ்ச்சி அடைந்தது. ஆனந்தம் பொங்கி வர அவன் வாய் திறந்தது.

'மின்னுதடி கால் மிஞ்சி
மினுக்குதடி தலைக் கூந்தல்
சிந்துதடி பல்லழகு ... சீரை
கெடுகுதடி காவிக்கறை'

அந்த நேரத்தில் கூட அவனிடம் நகைச்சுவை காணப்பட்டதில் ஆச்சரியமில்லைத்தான். ஆம் அவன் வாழ்க்கையையே விளையாட்டாகத்தான் கொண்டிருந்தான். விளையாட்டில் நம் பக்கம் இருக்கும் பந்தைத்தானே அடுத்த பக்கத்தில் இருப்பவன் எடுக்கப்பார்கிறான். வாழ்க்கையிலும் அப்படித் தானே? எதிர்ப்பு யாருக்குத்தான் இல்லை? ஏதோ நாம் தான் நாம் சாமர்த்தியத்தினால் சமாளிக்க வேண்டியுள்ளது. ஆகையால் வாழ்க்கையும் விளையாட்டும் ஒரே தத்துவத்தைத் தானே கொண்டிருக்கிறது. அவனும் இதனை அறிந்தானோ என்னவோ? ஆனால், இயற்கையாகவே அவன் வாழ்க்கையை ஒரு விளையாட்டாகத்தான் கொண்டிருந்தான். ஆனால், அவளோ ஒன்றும் பேசவில்லை. பேசாது சித்திரமாய் சமைந்திருந்தாள். சிலையென நின்றிருந்தாள். கருப்பண்ணனுக்கு என்னவோ போல் இருந்தது. நான் கேலியாக அவளிடம் பேசியிருக்கக் கூடாது என்பதை உணர்ந்தான். "லக்சுமி என்ன கோபமா? நான் சும்மாதான் கேலியா சொன்னன் ஏன்? நேற்று ராத்திரி வீட்டுல ஏதாவது நடந்துதா? ஏன் லக்சுமி பேசமாட்டேங்கிற...

'கண்ணே கனிரசமே
கட்டழகே கடல் முத்தே
உன் அப்பன் சொன்னதென்ன
கூறுவாயோ அன்பனிடம்'

என்று கேட்டான். ஆம். தன் கைவசமிருந்த எல்லா தேன் சிந்தும் தமிழ்ச் சொற்களையும் சிந்திவிட்டான். கண்ணே கனிரசமே, கட்டழகே கடல் முத்தே ஆகா. இதைவிட ஒரு காதலன் தன் காதலியை வேறு எப்படி விழிப்பது நீங்களே எண்ணிப்பாருங்களேன் அவன் இதற்கும் ஒன்றும் சொல்லவில்லை என்ன சொல்ல வேண்டியிருக்கிறது, இல்லை. சோகம் மனதில் சதவுகளையும் முட்டிக்கொண்டு வரும்போது எப்படித்தான் பேசமுடியும் மகிழும் நேரத்திற்றான் நாம் மனதில் பட்டதெல்லாம் 'உளறி' விடுகிறோம் கோபத்திற்றான் நாம் கண்டதையெல்லாம் 'கக்கி' விடுகிறோம். ஆனால், துக்கம் வரும் போது முடியுமா என்ன? அதுவும் இரண்டு நாட்கள் இன்பமாகப் பழகிவிட்டு, திடீரென்று பிரிவதென்று சொன்னால் முடியவே முடியாதே. அவள் பதில் சொல்லவேயில்லை. கேவிக்கேவி அழுதாள், வேறு என்ன செய்வாள்! அந்நேரம் யாரோ சிலர் அந்தப் பக்கமாக வந்தனர். ஆதலின் அவர்கள் ஓர் ஒதுக்கிடம் தேடவேண்டியதாயிற்று. வேறு எப்பக்கம் போவது. பக்கத்திலிருந்தது தொங்க லயம்தான் ... அந்த லயத்தில்தான் இப்போது ஒருவரும் இருக்கவில்லையே. ஏன். காரணம் அந்த லயத்தில் ரிப்பேர்' வேலைகள் நடந்துகொண்டிருந்தன அவர்கள், வந்த யாருக்கோ பயந்து அந்தப் பக்கமாகவே சென்றனர். ஆனால் அந்த ஆந்தைக் கண்கள் அவர்களைக் கண்டுவிட்டன. ஆம், ஒரு சோடி கண்கள் தான். வேறு யாருமல்ல. அந்த வழியாகப்போன 'கண்டாக்கையா' தான். அவரும் மெல்ல மெல்ல, பூனை போல அவர்களுக்கே தெரியாமல் பின் தொடர்ந்தார்...



அங்கு அவளே தொடங்கினாள் அவளுக்கு ஏதோ தைரியம் பிறந்தது போலும், யாரும் காணமாட்டார்கள் என்ற தைரியமோ என்னவோ......

'வேப்பங்காய் கசப்பாச்சே
வெற்றிலையும் நஞ்சாச்சே
நானும் கசப்பானேன்
நம்பினேன் என்ன செய்வேன்..

அவள் ஏன் இப்படிப் பேசினாள். ''மச்சான் உன்னையே நான் நம்பியிருந்தேன். நீ என்னை ஏமாற்றி விடுவாய் போல் இருக்கிறது. உனக்கு இந்த வெற்றிலைகூட நஞ்சாகி விட்டதுபோல இருக்கு. என்னை நீ வேப்பங்காய் போல் வெறுக்கிறாய். நான் என்ன செய்யட்டும்...'' என்று கேட்பதுபோல் இருக்கிறதே என்று வியந்தான். ஆம், அவள் அவன் மேல் சந்தேகம் கொண்டு விட்டாள் போலும். சந்தேகம் எழாதா என்ன? இவ்வளவு துன்பமான நேரத்திலும் இவ்வளவு கேலியாகப் பேசுகிறான். தன்னை விட்டு விட்டு இரண்டே நாட்களில் கொழும்புக்குப் போகத் தயாராய் இருக்கிறான். சந்தேகப்படாமல் அவள் என்ன செய்வாள். அவனும் இந்தச் சந்தேகத்தைப் போக்கவேண்டும் என்று எண்ணினான். தன்னின் நிலையை அவளிடம் சொல்ல வேண்டும், இவ்வளவு காலமாக அவனை எல்லோரும் வரவேற்றார்கள். கண்டவர்கள் எல்லாம் சுகம் விசாரித்தார்கள். ஆனால் இந்த இரண்டு நாட்களாகத் தன்னை யார் கண்டாலும், ஏதோ ஒரு பெரிய குற்றவாளியைக் காண்பதுபோல் பார்க்கிறார்கள். காதல் உணாச்சி இயற்கையானதில்லையா? அப்படி அவர்கள் தூற்றுவதால்தான், தான் போகிறேன் என்பதையும், அவளை வெறுக்கவில்லை என்பதையும் அவளிடம் அறிவிக்கத் தொடங்கினான்...

'தெம்மாங்கு பாடி
தெருவழியே போனாலும்
அன்பான வார்த்தை சொல்லி
ஆதரிப்பார் யாருமில்லை'

"ஆமாம். லச்சுமி நான் சந்தோசமா இருக்க நினைத்தாலும் இப்பொழுது இந்தத் தோட்டத்தின் மக்கள் என்னை வெறுக்கிறார்கள் அவர்களில் ஒருவராவது என்னைக் குளிர்ந்த வார்த்தை சொல்லி என்னை வரவேற்க மாட்டேன் என்கிறார்கள். நானுமென்ன செய்யட்டும். நாம் என்ன தவறு செய்தோம். அதனால்தான் என் மனசை மாத்திக் கொள்ள நான் கொழும்புக்குப் போறேன். மற்றப்படி ஒன்னையே மறந்துப்புட்டுப் போகல்ல" என்றான் அவன் மேலும் அவன் சொல்லுவான் … …

"என் அன்பான குணமயிலே. நீ மட்டும் மனம் கலங்காம இரு எனக்கு என்ன துன்பமும் வந்தாலும் நான் கட்டாயம் கொஞ்ச நாள் போய் இங்கு திரும்பி வருவான். எங்க அப்பா கூட அப்படித்தான் சொல்லியிருக்காரு. அவர் கண்ணை மூடிட்டா நான்தான் இங்கக் கங்காணியா வரனுமாம். அந்த நேரத்தில் இந்தத் தோட்டத்து ஆள்க என்னைய ஏத்துக்குவாங்க அப்ப நான் கண்காணியாயில்ல வருவன்... ஆமாம்...

'இடி இடிச்சி மழை பொழிய
இரு கடலும் பெருகிவர
கொடைபிடிச்சி நான் வருவேன்
குணமயிலே கலங்கிடாதே...

இந்தச் சொற்களைக்கேட்டவுடன்தான் அவள் முக கமலத்தில் ஒரு புத்தொளி தோன்றியது. இந்த மாற்றம் அவள் அவன் புன்னகையால் வெளிப்பட்டது. தேயிலையின் தளிர் மெல்ல அவிழ்வதுபோல் இருந்தது அது. பசுமையான சிரிப்பு... புன் சிரிப்பு...அவன் உள்ளம் தள்ளாடியது. மனதை அடக்கிக்கொண்டான். அவளின் மன நிலையையும் நோக்கத்தையும் அறிய வேண்டும்தானே? நாசுக்காகத் தன் எண்ணத்தை வெளியிட்டான் இப்படி. மற்றவர்கள் என்றால் பச்சையாகச் சொல்லியிருக்க முடியும். ஆனால் அவன் படி



ப்பு வாசனையில்லாதவனாக இருந்தாலும் இயற்கை அவனுக்குக் கொடுத்திருந்த பண்பு இருந்தது. தன்மை இருந்தது இந்தத் தோட்டப்பகுதி மக்களுக்கு இறைவன் கொடுத்திருக்கும் இயற்கையான மூளை அல்லது சக்திபோலும் இது...... அவன் சொல்லுகிறான்...

'முட்ட போட்ட பணியாரம்
மொதநம்பர் கோழிக்கூட்டு
தேனால செய்த தீனி தின்னு
திவ்யமா பசியாறலாமே.

இதன் உட் கருத்து அத்தக் கோடியிடையாளுக்கு உடனடியாக விளங்கிக் கொண்டது. அவள் இதற்கு இசைவாளோ என்பதுதான் அந்தக் கருப்பண்ணனின் கேள்வி இதற்கு அவள் என்ன விடையளிக்கப் போகிறாள் என்று அவன் எதிர்பார்த்துக் காத்திருந்தான். அவள் தன்னின் கருத்தை மெல்ல வெளியிடத் தொடங்கினாள். அவள் அவன் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுமுகமாகச் சொல்லுவாள்.

'பச்சரிசிப்பணியாரம் நான் பலகாலம் எங்கள் வீட்டில் பகிர்ந்து மற்றவர்களுடன் சாப்பிட்டவள்தான். ஆனால் நீங்கள் சொல்லும் இந்தப் பொருட்களை இங்கேயிருந்து தனிமையில் திங்க என்னால விருப்பமில்லை. அதற்கு வேண்டிய காலமுமில்லே அதாவது பாருங்கள், நீங்கள் கொர்ஞ்க் காலம் காத்திருங்கள் என்பதை நான் சொல்ல வேண்டுமா என்ன?' என்று சொல்வதுபோல் அவள் சொன்னாள்...

"பச்சரிசிப் பலகாரம்
பகிர்ந்து தின்னேன் பலகாலம், இத
இன்பமுள்ள சோலைக்குள்ளே
இருந்து தின்ன நேரமில்ல..."

அவனுக்கும் நன்றாக இது பட்டுவிட்டது. அவனும் அதனை அத்தோடு விட்டுவிட்டான், எல்லாம் உணர்ச்சித்

துடிப்புத்தானே? ஏறி இறங்கும் தன்மையதுதானே அது. அதுவும் கருப்பண்ணன் போன்றவர்களுக்கு இது சாதாரண இயற்கை நிகழ்ச்சிதானே. அவன் தன் பேச்சை மாற்ற வேண்டியிருந்தது. அவனும் வேறு ஏதாவது பேசத்தான் நினைத்தான். அவளும் அதையே இந்நேரம் விரும்பினாள். தனிமையில் இருந்தாலும் கூடத் தங்கள் தன்மை மாறாதவர்கள் அவர்கள் என்பது நன்கு புலனாகிவிட்டது. தவறு ஏதும் நடைபெறவில்லை. மறுபடியும் தன் கவலை வெளியிடும் முகமாகச் சொன்னான்...

''மஞ்சள் பொட்டுச் சேலைக்காரி
மாதலம்பால் மேனிக்காரி
உன்னோடு கைவீசி வர
எனக்கு அங்கம் துடிக்குதடி...

இப்படி அவன் தன் விருப்பத்தைச் சொன்னவுடன் அவள் சொல்லுவாள். ''என்ன மச்சான்; நீங்க என்ன சொல்றிங்க. நேத்து முந்தநாள் நடந்தது போதாதா! இன்னும் வேணுமா என்ன? இப்ப நாம நீங்க சொல்ற மாதிரி கைவீசி கனகச்சிதமாப் போனா பிறகு கேக்கணுமா என்ன! நம்மல உயிரோடேயே கொன்னுடுவாங்க, அவள் வாய்தான் இப்படி பேசியதேயொழிய அவள் மனம் எதையோ எண்ணி ஏங்கத்தான் செய்தது. ஆனால் மறுகணம் அவள் மனம் சமநிலை அடைந்தது. அவள் அவனிடம் ஏதோ ஒன்றைச் சொல்லிவிட வேண்டுமென்றிருந்தாள். சொல்வோமா வேண்டாமா என்றுகூட நினைத்தாள். ஏன்? சொல்வதற்கும் தீர்மானித்தாள். என்னது, விடயம் கொஞ்சம் 'பொல்லாதது' தான். ஆனாலும் தன் காதலனிடம் சொல்லித்தான் ஆக வேண்டுமென்று முடிவு செய்தாள். அந்தக் கதையைத் தொடங்குமுன் தன் காதலனின் மனதைக் கொஞ்சம் குளிரப் பண்ண வேண்டுமென்று நினைத்தாள். ஏனெனில் இப்படிப் பட்ட விடயங்களைக் கேள்விப்பட்டவுடன் ஆண்கள் சாதாரணமாகச் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பார்கள் என்பதை



அவள் எப்படியோ அறிந்திருந்தாள். அறிந்திருந்தாளோ இயற்கை அவளுக்கு சொல்லிக்கொடுத்ததோ என்னவோ சரி எது எப்படியிருப்பினும் அவள் முதல் இப்படிச் சொன்னாள்...

காசிக்கட்டி கழிபாக்குப்போல
கவலையெல்லாந் தீர்த்த மச்சான்
கொட்டப்பாக்கு கொழுத்து வெத்தலபோலே
கோபமெல்லாந் தீர்த்த மச்சான்...'

அவனுக்கும் இதைக் கேட்டவுடன் சிரிப்பு வந்துவிட்டது வாய்விட்டே சிரித்துவிட்டான். ''என்ன லக்சுமி ஒண்ட கவலையெல்லாம் தீர்ந்துபோச்சா. ஏன் ஒன்ட கோபமெல்லாம் ஓடிப்போச்சா. அப்படியல்ல இருக்கொணும். அப்பத்தானே நல்ல புள்ள... அப்படியென்னா நான் இனிமேலே கவலையில்லாம கொழும்புக்குப் போய் வரலாம் இல்லியா? என்று மீண்டும் பழைய பிரச்சினையையே கிளப்பிவிட்டான் கருப்பண்ணன். இவ்வளவு நேரம் தங்களின் நிலையையே மறந்து தாங்கள் இருக்கும் சுற்றுடலையே மறந்து பேசிக்கொண்டிருந்த அவர்கள் மீண்டும் இந்த உலகத்துக்கு வந்தார்கள், என்றுதான் சொல்ல வேண்டும். லக்சுமி மீண்டும் மனக்கலக்கம் அடைந்தாள் என்றாலும், மனம் சற்றுத் தேறியிருந்தாள். அவள் முகமே அதனை காட்டியது. அவள் எதையோ சொல்ல இருந்தாள் என்று சொன்னேன் அல்லவா? அதனைச் சொல்ல மெல்ல வாயெடுத்தாள்.

''மச்சான் நீங்க சந்தோசமா கொழும்புக்குப் போய் வரலாம். அதுக்கு முன்னால் ஒரு சின்ன விடயம் உங்ககிட்ட சொல்லணும் அதாவது பாருங்க...

'காட்டுத் தொங்கலிலே கண்டாக்கையா
தோக்குதோல் மேலே
குருவி சுடயில கண்டாக்கையா
குறிப்பு எம்மேலே...'

அவள் இப்படிச் சொல்லி முடிந்ததும்தான் தாமதம் அந்த அறையின் வாயிலிருந்து... 'ஆ...ஆ...ஆ...' என்ற ஒரு வில்லன் சிரிப்பொலி கேட்டது அது அந்தப் பாழ்பட்ட சுவர்களில் மட்டும் பிரதி ஒலித்தது. அந்த எதிர் ஒலி அங்கிருந்த இருவரின் மனதிலும் திகிலை நிரப்பியது, அவர்கள் மனம் அச்சத்தின் எல்லையைக் கண்டது.

# 6

அந்த ஒலிக்குச் சொந்தக்காரர் வேறு யாருமல்ல; அவர்களைப் பின்தொடர்ந்து வந்து ஒளிந்திருந்த அந்தக் கண்டாக்கையாதான். லச்சுமி யாரைப் பற்றிச் சொன்னாளோ அந்தக் கண்டாக்கையாதான்.

அடிமேல் அடியெடுத்து மெல்ல வைத்தும் பூனைபோல் வந்தார் அவர். இருவருமே கண்டார்கள். ஏன் அவ்வளவு அளந்தெடுத்து வைத்த அடியுடன் வரவேண்டும். ஆம் கோபம்தான் காரணம். ஏதோ வெட்டி வீழ்த்தப் போகிறவர் பேச்சு மூச்சு இல்லை...சீ பற..வே' என்று தொடங்கினார் கருப்பண்ணணின் கண்கள் சிவந்தன கண்டாக்கரின் கண்கள் கொவ்வைப் பழங்களாயின. என்ன விபரீதம் நடக்கப் போகின்றதோ என்று நடுங்கினாள் லச்சுமி.

லச்சுமி நினைத்ததுபோல் விபரீதம் ஒன்றும் நடைபெறவில்லை. லக்சுமி அருகில் வந்தவர் ஒன்றும் பேசவும் இல்லை. அவளை கண்கொட்டாமல் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டிருந்தார். பின் கருப்பண்ணனையும் பார்த்தார். மௌனமே சாதித்தார். எதோ ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்தவர் போல் காணப்பட்டார். இப்பொழுதுதான் பேசினார் உம் நடங்கள் என்னிடம் ஒன்றும் பேச வேண்டியதில்லை. நடங்கள் தொர பங்களாவுக்கு...உம்...உம்என்று அதட்டினார் சரி. சரி. மொதல்ல நடங்கள் சின்னதொரகிட்ட: அவர்தான்



ஓங்களுக்கு நல்லது என்று சொல்லிக்கொண்டே, அவர்களை அந்த தோட்டத்தின் சின்ன துரையாகிய திரு. ரொபின்சனிடம் அழைத்துச் சென்றார். ஏனென்றால், மிஸ்டர் ரொபின்சன்தான் அவருக்கு நன்றாக அறிமுகமானவர் அல்லாமலும் அவர்கள் இருவரும் சேர்ந்து சில 'திருவிளையாடல்கள்' நடத்துவதாகவும் அந்தத் தோட்டத்தின் மக்கள் இரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தனர். ஆம், ஏழைகள், அப்பாவிகள் என்றால்தானே அவர்களைப் பற்றிப் 'பப்ளிக்காய்'பேசுவர். பணக்காரன் அதிகாரம் பெற்றவன் என்றால் எல்லாம் மூடு மந்திரமாகத்தான் இருக்கும்.

முடிவு? கருப்பண்ணன் உடனடியாக கொழும்புக்கு அனுப்பப்பட்டான், லச்சுமி கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டாள்,

நாட்கள் சில கடந்தன. வழமைபோல் லச்சுமி வேலைக்குச் சென்றாள், வழியில் தாங்கள் அன்பு பொங்கி வழிய ஆர்வத்துடன் கூடி நின்ற இடம் கண்டாள். மனதில் எழுந்த உணர்ச்சிகள் வார்த்தைகளாக வெளிவந்தன வாயிலிருந்து...

'பொடியன் நின்ன லெக்கு
கும்மாளம் போட்ட லெக்கு
வாழைப்பழம் தின்ன லெக்கு
பாழடஞ்சி கெடக்குடா'

ஆம், அவள் உள்ளம் என்னென்ன கனவுகள் கண்டனவோ. கனவுகள் போல் நடந்த நிகழ்ச்சிகள் இப்பொழுது ஒன்றன் பின் ஒன்றாக அவள் மனதில் படம்போல் வந்து மறைந்தன. கொழுந்து கிள்ளும் தளிர்க் கரங்கள் கொண்ட, கொடியிடையாளின் உள்ளமும் தளிர்போல் தான் இருந்தது, பிரிவு என்னும் வெப்பத்தால் அதுவெந்து கரிந்தது. அவன் உருவம் அவர் மனதில் நிழலிட்டது.

'கட்டுறது வெள்ளை வேட்டி
கையிலொரு உருலோசு
நிக்கிறது ரோட்டுத் தொங்க,
எனக்கு நெருப்பா பிடிக்குமய்யா'

ஆம், அவள் பட்டபாடுகளையெல்லாம் நினைத்துப்பார்த்தாள். அவன் ரோட்டுத் தொங்கலில் இருந்து பார்க்கும்போதே அவள் மனம் நெருப்பாய்ப் பிடிக்குமே... இன்றைக்கு... அதைவிட அதிகமான உஸ்ணம் வந்து வாட்டுகிறதே பிரிவுத் தீ பொசுக்கித் தள்ளுகிறதே! உம். அவனுடன் ஒன்றாக இநந்து, இருவரும் தசையும் நகமும் போல இருந்தனர். இன்று அவர்களின் பெற்றாராலும் தோட்டத்து மக்களாலும், கண்டாக்கையாவாலும் பிரிக்கப்பட்டு விட்டனர். பழைய பஞ்சாங்கம் அல்லவா பார்க்கிறார்கள் இவர்கள். கலந்த இரு உள்ளங்களை கைபிடிக்க விடமாட்டேன் என்கிறார்களே, என்று நினைத்தாள் அவள்...

'ஆத்துல ஊத்து நோண்டி
அவரும் நானும் பல்விளக்கி
பல்லுகாவி போகு முன்னே
பஞ்சாங்கம் பார்க்கிறாங்க'

எவ்வளவு அழகாக அந்த நிலையை எடுத்துரைக்கிறாள் அவள். ஆம், அவர்கள் இப்பொழுதுதான் பல்விளக்கத் தொடங்கியிருந்தார்கள், அதுவும் ஆற்றுப்பக்கத்தில் ஊற்றுத் தோண்டி. ஆனால் அந்தப் பற்களில் உள்ள கறை போகுமுன்னமேயே பெற்றாரும் மற்றாரும் பஞ்சாங்கம் பார்க்கத் தொடங்கி விட்டார்கள், ஆமாம் அவர்கள் பழகிக் கொஞ்ச நாட்கள்தான் ஆகியிருந்தது. ஆனால் அதற்குள் பாவிகள் அவர்களைப் பிரித்துவிட்டனர். இப்படி வெட்டி விட்டதில் ஆனந்தம் அதிகம் கொண்டவர் கண்டக்டர்தான். ஏன் தெரியுமா? அதுதான் லச்சுமியே



உங்களிடம் சொல்லி வைத்தாளே. ஆம், கண்டக்கையாவுக்குத் தன்மேல் ஒரு கண்ணென்று அவள் சொல்லியது ஞாபகம் இருக்கிறதுதானே?

லச்சுமியும் தன் எண்ணத்தில் பாரதத்தைச் சுமந்து கொண்டு நடந்து வந்தாள் ஒரு கணம் திகைத்து நின்றவள் போல் நின்று விட்டாள். ஏன்? ஆம். அந்த இடத்தைக் கண்டவுடன் அவள் மனம் துணுக்குற்றது. அந்த தொங்கலயம்தான் அது. எந்த இடம் என்று நான் சொல்ல வேண்டுமா என்ன? இதோ லச்சுமியின் மனதை சொல்கிறது

'மஞ்சக் குளிச்சது பீலிக்கர
வந்து படுத்தது தொங்கலயம்
கண்டு பிடிச்சது கண்டாக்கையா
கைமாச் போட்டது சின்னதொர'

நடந்தவைகள் அவள் மனதில் படம்போல் பதிந்திருந்தன என்பதற்கு வேறு ஆதாரம் வேண்டுமா என்ன. அவள் பீலிக்கரையில் மஞ்சள் குளித்து மகிழ்ந்திருந்தது. அந்த நேரத்தில் தன்மேனியழகை கருப்பண்ணன் கண்டு ரசித்தது அவனின் கூரிய கண்கள் வந்து அவள் உள்ளத்தைத் துளைத்தது; அன்று நடந்த நிகழ்ச்சி, தனிமையில் அவர்கள் பேசிக் கொண்டிருக்க கண்டாக்கையா வந்து கையும் களவுமாகப் பிடித்தது: பின் சின்ன துரையிடம் இட்டுச் சென்றது; எல்லாமே அவள் மனதில் நிழற்படம்போல் வந்து மறைந்தன.

இப்படியான எண்ணங்கள் மனதில் பொங்க மங்கை அவளும் மெல்ல அடியெடுத்து வைத்து நடந்தாள். நடந்து சென்ற அவள் கண்டது அவள் மனதை இன்னும் நோகச் செய்தது. அங்கு ஒரு சோடி போகக் கண்டாள். அவர்கள் இருவருமே கூலியாட்கள். அவன் கொழுந்து கிள்ளும் மாரியாய்: அவன் கவ்வாத்துக்குப் போகும் மருதை. அவர்களைப் பற்றி ஏன் ஒருவரும் ஒன்றும் சொல்வதில்லை! ஆம், இர

ண்டு பேருக்கும் நாம் ஒன்றுதானே: அதனாலேயா? ஒரு வேளையிருக்கலாம் மாரியாய் என்ன சொல்கிறாள்... லச்சுமி கேட்கிறாள். நாமும் ஏன் உற்றுக் கேட்கக் கூடாது. கேட்போமே...

'வானத்துல மீனிருக்க
மருதயில நானிருக்க
சேலத்துல நீயிருக்க
சேருவது எக்காலம்'

அவள் ஏன் இப்படிச் சொல்கிறாள். அவன் அவளை ஏமாற்றுகிறானா? லச்சுமியின் மனதிலேயும் ஏக்கம். கருப்பண்ணனும் இப்படித் தன்னை ஏமாற்றுவானோ என்று எண்ணினாள் இப்பொழுது, அவள் நிலை அப்படித்தானே ஆகிவிட்டது மாரியாயோ உவமையாகச் சொன்னாள், ஆனால் லச்சுமியின் வாழ்க்கையில் அது உண்மையாகவே நடந்தேறியிருக்கிறதே, என்ன செய்வாள்? கடவுள் எழுதி வைத்தது அவ்வளவுதான் போலும், லச்சுமியும் அப்படியே எண்ணத் தொடங்கினாள். வேறு எப்படி நினைப்பாள், அவர்கள் இன்பமும் துன்பமும் அந்த எளிமையான நம்பிக்கையில்தானே தங்கியிருந்தது. அப்படியாக நாம் கண்டசோடியிலிருந்த பெண்ணாகிய மாரியாய் கேட்க மருதை என்ன சொல்கிறான் பாருங்களேன், ஏன் லச்சுமியும் கேட்டுக் கொண்டுதானே நடந்து வருகிறாள். அவன் அவள் கேட்ட அந்தக் கேள்விக்குச் சொன்ன பதில் இதுதான்...

'பேரிச்சம் பழமே
பெரிய இடத்துக் கிரீடமே
பேசலாமென்றாலும்
பெற்ற தாயி சத்துராதி'

ஆம். மாரியாய், நான் என்ன செய்யட்டும். எனக்கு உன்னைக் கல்யாணம் கட்டிக்கினனும் என்னு கொள்ள



ஆசைதான். ஆனால் நான் என்ன செய்யட்டும்? என் தாய் உன்னைக் கட்டிக்கொள்ள வேண்டாம் என்று சொல்லுறாளே. நீ எனக்குப் பேரிச்சம் பழம்தான். பெரிய இடத்துக் கிரீடம்தான்...ஆனா...என்று இழுத்தான் அவன். அந்த மாரியாய் என்ன செய்வாள்! அவள் கண்கள் கலங்கின.

இதைப் பார்த்துக் கொண்டு வந்த லச்சுமி மனதிலும் ஒரு வித அன்பு சுரந்தது அந்த மாரியாய் மேல். ஆம், இரண்டு பேரும் ஒரே தோணியில் இருந்ததாலோ என்னவோ இந்த இரக்கம் பிறந்தது. அடேயப்பா இந்தக்காதல் என்பது ஏழைகளிடமும் புகுந்து பண்ணுகிற திருவிளையாடல்கள் சொல்லுந் தரமன்று. ஏன்! கடவுளையே பிடித்தாட்டியதாகவும் கதைகள் உண்டே, கடவுளுக்கே அந்தக் கதியென்றால் சாதாரண மனிதர்கள் எந்த மட்டுக்கு... என்று எண்ணிக் கொண்டோ நடந்தாள் லச்சுமி அவளுக்கு முன்னால் சென்றவர்கள் என்னென்னவோ பேசிக் கொண்டு போனார்கள்.

மனதில் அவனின் நினைவு மீண்டும் தலையெடுத்தது. ஏன்தான் தன் தரத்துக்கு மேம்பட்ட ஒருவனை நேசித்தோம் என்று எண்ணத் தொடங்கினாள், அவளே அதனை மிக அழகாகக் கூறுகிறாள்.

'உடல் கழுவ பீலிக்கரை
உயர்ந்த மலை நல்ல தண்ணி
ஒரு நாள் குடிக்கப் போய்
ஊரெங்கும் பேரெடுத்தேன்'

ஆம், கருப்பண்ணனை அடைய வேண்டி அவனுடன் பேசிப் பழகப் போய் அவளுக்கு வந்த வினையை வெகு நேர்த்தியாகக் கூறியிருக்கிறாள் நோக்குங்களேன். இவ்வாறு அவள் தன் அன்புத் தோழியொருத்தியிடம் சொல்லிக் கொண்டிருக்கும்போது கேட்டது தோழியா! தன் மனமே அவள் தோழி!

வேலைத்தளத்தில் வேலைகளை ஒழுங்காகத்தான் செய்து முடித்தாள். இப்பொழுதெல்லாம் அவனின் எண்ணம் அடிக்கடி வருவதில்லை. ஏதோ இருந்தோர் சமயம் அவ் வெண்ணம்—தலையெடுக்கும் ஆனால் வேலை மும்மாரத்தில் அது மங்கி மறைந்துவிடும். இப்பொழுது கங்காணிகூட கொஞ் சம் கண்டிப்பாகத்தான் இருந்தான். ஆனால் இந்தக் கண் டிப்பு கண்டக்டரின் போதனையின் பேரில் நடைபெற்ற தென்பதை அவள் அறியமாட்டாள். ஒவ்வொரு நாளும் ஒழுங்காக வேலைக்கு வந்து, ஒழுங்காக வேலை செய்து யாருக்கும் தீங்கு வராமல் நடந்து வந்தாள் இந்நாட்களில் நம் கதாநாயகன் கருப்பண்ணனுக்கு என்ன நடந்தது. கொழும்பு போய்ச் சேர்ந்தான். சரி, போனவன் பாடு இதோ...

கொழும்பு மாநகரில் கொஞ்ச நாட்கள் அவன் அங் கும் இங்கும் அலையவேண்டியதாயிற்று. கொழும்பில் என்ன வேலையாபோட்டு வைத்திருக்கிறார்கள். இவன் போன்றவர் கள் போனவுடன் கொடுத்துவிட கடையியில். அவன் சுற்றித்திரிந்து ஒரு சிறு குடிசைக்கு முன்னால் வந்து நாளும் படுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. பகலில் கொழும்பு நகரை வலம் வந்தான். மாலையானவுடன் அவனின் அந்த இருப்பிடத்துக்கு வந்து விடுவான். அந்த இடம் ஒரு சின் னக் குடிசை ஆனால் அதற்குப் பின்னால் திறந்த வெளி. கீரைவகைகள் பயிரிடப்பட்டிருந்தன. அந்தக்குடிசையில் வாழ்ந்தவர்களும் தமிழர்கள்தான். கீரை வியாபாரம் செய்து சீவனம் நடத்தி வந்தனர். ஒரு வயது வந்த தந் தை. ஒருதாய், அவர்களுக்கு ஒரு மங்கை. சுமார் பதினாறு வயதிருக்கும், தகப்பன், தாய், மகள் மூவரும் சேர்ந்து வேலை செய்தனர். தாயும் மகளும்தான் கீரைகளைக் கொண்டு சென்று விற்று வந்தனர் மார்க்கட்டில்.



இவன் போய் அங்கு படுத்திருப்பது முதலில் அவர் களுக்குப் பிடிக்கவில்லைதான். பின் ஒருநாள் இவன் தன் வாழ்க்கை வரலாற்றை அவர்களிடம் ஒப்புவித்திருந்தான். அவர்களும் அனுதாபப்பட்டார்கள். அவர்களுக்கும் தண் ணீர் இறைப்பதற்கு ஒருவன் தேவைப்பட்டான். தந்தைக் கும் வயது போயிருந்ததுதானே! சில நாட்கள் செல்ல அவ னும் அந்தக் குடும்பத்தில் ஒருவனாகி விட்டான். அவன் கிணற்றிலிருந்து நீர் இறைக்க வேண்டும். அந்நேரங்களில் சிலவேளைகளில் லச்சுமியின் ஞாபகம் வரும். அந்நேரங் களில்...

'உச்சிதர்ம் பூவே
உயர்ந்திருக்கும் தாளம்பூவே
கண்வலிப் பூவே, நான்
கண்டு மிக நாளாச்சே'

என்று ஏதேதோ பாடல்களைப் பாடிக்கொண்டே வேலை செய்தான். சில வேளைகளில் தன் தந்தை, தாயின் நினைவு வரும். அந்நேரங்களிலெல்லாம் தன் தோட்ட வாழ்க்கையின் நினைவு தலையெடுக்கும். நண்பர்களுடன் தான் வாழ்ந்த வாழ்க்கை ஞாபகம் வரும். 'ஏன்? இப் பொழுதெல்லாம், கூலிக்காரர்களின் பிள்ளைகளாகயிருந்தா லும், அங்கப்பனும் ராசவேலும் மற்றவர்களும் சந்தோச மாக இருப்பார்களே' என்று எண்ணினான் மனம் வருந்தி னான். அவன் வாய் அப்படிப்பட்ட நேரங்களில் தன் நிலை யை விளக்கும் நல்லதொரு பாடலையே பாடும்.

'கங்காணி போட்ட சட்ட
கையிரண்டும் கிழிஞ்ச சட்ட
கூலிக்காரன் போட்ட சட்ட
கவருமெண்ட்டு வெள்ள சட்ட

ஆம், கங்காணி போட்ட சட்டையாகிய தான் இருக்கும் நிலையையும், சாதாரண கூலிக்காரர்களுடைய மக்கள் இருக்கும் நிலைமைகளையும் சிந்தித்துப் பார்த்துக் கொண்டான். மனம் மிக வருந்தினுன். இப்பொழுது என்ன செய்ய முடியும்? ஒரு நாள்......

# 7

அவன் தோட்டத்துக் கிணற்றில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தான். அந்நேரம் அந்தப் பெண். அதாவது மீனுட்சி அங்கு வந்து வேலே செய்து கொண்டிருந்தாள். மீனு கீரைப் பாத்திக்கு சாணமிட்டுக் கொண்டிருந்தாள். இதைக் கருப்பண்ணன் கவனிக்கவேயில்லை. ஒரு விடயம். மீனு நல்ல சிகப்பு. அழகியும்கூட. நல்ல நீண்டநாசி சேற்றில் நின்று வேலை செய்யும் போது உண்மையிலேயே சேற்றில் முளைத்த செந்தாமரை போல்தான் காட்சியளிப்பாள்.

அப்படி அவன் ஒரு நாள் வேலை செய்து கொண்டிருக்கும்போதுதான், கருப்பண்ணன்தான் தன் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு தோட்டத்தில் தங்களைத் தாண்டிப் போகிற பெண்களைப் பார்த்துப்பாடுகின்ற பாட்டைப்பாடத் தொடங்கினுன்...

'டிங்கிரி டிங்காலே மீனுட்சி
டிங்கிரி டிங்காலே நீ
எங்கிட்டுப் போனுலு மீனுட்சி
ஓங்கூட நான் வருவேன்'

இவ்வாறு பாடிவிட்டுப் பின் கடைக்குப் போகும் குமரிகளைப் பார்த்து இப்படித் தொடர்ந்து பாடுவதுண்டு. அதாவது...



'கடைக்கு போனுலு மீனுட்சி
கட்டாயமா வருவேன் நீ
சீமைக்குப் போனுலு மீனுட்சி
சீக்கிரயா வருவேன்'

இதைத் தொடர்ந்து என்ன வெல்லாமோ பாடத் தொடங்கினுன். ஆனுல் ஒவ்வொரு பாட்டிலும் மீனுட்சி மீனுட்சி என்று வராமல் இருக்கவில்லை. அங்கிருந்த மீனுட்சிக்கு இது ஒருவித ஆச்சரியமாயிருந்தது. ஆம், அவள் அவனுடன் எத்தனை தடவை பேச நினைத்தும் அவன் ஒருவித சந்தர்ப்பத்தைக் கொடுத்ததாகத் தெரியவில்லை. இப்பொழுது திடீரென்று ஏன் இப்படித் தன்னைப் பார்த்துப் பாடுகிறுன் என்று அவள் எண்ணினுள். அவள் பாடினதற்கென்ன அவளைப் பார்த்துப் பாடவில்லையே! வேலை மும்மரத்தில்தான் பாடிக்கொண்டிருந்தான். என்றுலும் இவள் சந்தேகித்தாள் ஒருவேளை தன் மனநிலையை வெளிப்படுத்துவதற்காகத்தான் இப்படிப் பாடுகிறுன் போல் இருக்கிறது என்றே எண்ணினுள். ஆம், கடைக்குப்போனுலும் கட்டாயமாக வருவேன் என்று சொன்னுனே. ஒருவேளை அவள் கீரை விற்கப்போகும்போது அவள் பின்னுல் வந்து விடுவானே என்று கூடசந்தேகித்தாள் அவள் மனதிலும் கிலேசம் ஏற்பட்டத்தான் செய்தது அந்நேரம் அவள் தாய் அவளை மீனுட்சி என்றழைத்தாள், குடிசைக்குள் இருந்து கொண்டே, அப்பொழுது அவள் தன்னை அறியாமலே என்ன அம்மா என்று உரத்துக்கத்திவிட்டாள். இந்தச் சத்தம் கருப்பண்ணன் காதில் விழுந்தது. அவன் திரும்பிப் பார்த்தான். அவள் நகைத்தாள். அவன் சிரித்தான். கண்கள் நான்கும் சந்தித்தன... ஏதோ ஒரு ஆழமான கருத்து காணப்பட்டது. அந்தப் பார்வையில். மறுகணம் அவள் தன் சுயநினைவுக்கு வந்தாள். அம்மா அழைத்ததை உணர்ந்தாள், ஓட்டமாக ஓடிவிட்டாள் குடிசைக்குள் சாணியும் கையுமாக. வழக்கத்துக்கு மாறுக. கை கழுவாமல் வீட்

டுக்குள் நுழைந்த மகளைக் கண்டாள் தாய். அவளும் மீனாட்சியை ஏதோ ஒரு விததாகத்தான் பார்த்தாள். என்னடி மீனாட்சி என்ன செஞ்சிகிட்டிருந்த... ஓ...... ஓ...... பாத்திக்கு உரம் போட்டுக்கிட்டிருந்தியா என்றவுடன் தான் தன் கைகளைப் பார்த்தாள் மீனாட்சி. மீனாட்சியும் புன்முறுவல் செய்தாள். அவள் தாயும் மௌனமாக அவளைப் பார்த்தாள். ஒன்றும் சொல்லவில்லை. முறுவலித்தாள், ஏன் அவளுக்கும் ஏதோ தெரியுமோ? தாயே பாடினாளே...

தண்ணிக்குப் போனாலு மீனாட்சி
தாலி கொண்டாரு வேன் நீ
தனிய போனாலும் மீனாட்சி

என்று அவள் பாட்டை முடிக்கு முன்னாலேயே, மீனாட்சி மறைந்து விட்டாள். அவள் தாய்க்கு அவ்வளவு மனப்பான்மையா. ஓ...ஓ...கொழும்பு மாநகரில் கனகாலம் வாழ்ந்து வந்தவளாயிற்றே. அதுதான் போலும், இல்லை! தன் கணவனும் வயோதிபனாகி விட்டான். தன் மகள் மீனாட்சியை எவனாவது ஒருவனுக்குப் பிடித்துக் கொடுத்திட வேண்டுமென்று நினைத்திருந்தாள். ஆம், கையில் வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கலைவான் ஏன்? என்ற எண்ணம் அவளுக்குப் பதில் ஆச்சரியமில்லையே. எல்லாம் காலா காலத்தில் நடைபெற வேண்டியவைதானே.

காலச்சக்கரம் சுழன்றது. கனவேகமாகச் சுழன்றது. ஐந்து முறை சுழன்று விட்டது. அடேயப்பா எத்தனை மாற்றங்கள், நான் சொன்னால் நீங்கள் நம்புவீர்களோ என்னவே? ஆம், கருப்பண்ணனுக்குக் கலியாணம் நடந்து விட்டது. ஏன் நம் கதாநாயகி என்று சொன்னோமே அந்த லச்சுமிக்கும் கல்யாணம் நடந்து விட்டது, ஆனால் அவர்கள் இருவருக்கும் கல்யாணம் நடைபெறவில்லை. அதாவது அவர்கள் தம்பதிகள்—கணவன் மனைவி ஆகவில்லை. அவன் மணந்தது. மீனாட்சியை. அவள் லச்சுமி, மணந்தது..



அது ஒரு பெரிய கதை போங்கள். அவள் சில நாட்கள்...

'ஆசை வச்சேன் ஓங்க மேலே
அரளி வச்சேன் தோட்டத்திலே
அரளிப்பூ பூக்கையில், நாம்
ஆளுக்கொரு தேசம்ய்யா'

என்று தன் காதலன் கருப்பண்ணனை நினைத்து பாடிப் பாடிக் காலம் கழித்தாள். பூத்த பூக்களும் ஒவ்வொன்றாக வீழ்ந்தன. அவள் மனதிலிருந்த அந்தக் கருப்பண்ணனும் கொஞ்சம் கொஞ்சமாக விழுந்து வந்தான் ஏன்! விழுந்தே விட்டான். அவள் விட்டுப் போன இடத்தில் இன்னொருவருக்கு உடனடியாக இடம் கிடைக்கத்தான் செய்தது. அது வேறு யாருமல்ல. நம் எல்லாருக்கும் தெரிந்த நபர்தான். ஏன்? லச்சுமி மேல் கண்ணாய் இருந்தவர்தான். ஆம் நீங்கள் நினைப்பதுபோல் அதே கண்டக்டர்தான். அதற்குக் கூட கொஞ்சநாட்கள் கண்டாக்கையா நல்ல தவம்கிடக்க வேண்டியதாயிற்று. ஆம் கருப்பண்ணன் அவள் மனதிலிருந்து மறைய வேண்டியிருந்ததுதானே. ஒருநாள், லச்சுமி வேலைக்குப் போய்க் கொண்டிருந்தாள். அப்போது...

'பணிய லயத்து சாவ
பாசமுள்ள வெள்ள சாவ
காலு வளர்ந்த சாவ
கண்டாலும் பேசுதில்லை'

என்ற பாடல் காற்றில் மிதந்து அவள் காதில் வந்து வீழ்ந்தது திரும்பிப் பார்த்தாள். அருகில் கண்டாக்கையா நின்று கொண்டிருந்தார், அவள் முகம் கவிழ்ந்தாள். ஒன்றுமே பேசவில்லை. அவரே தொடங்கினார். என்ன லச்சுமி எப்படி சுகம். நல்ல சுகம்தானே? என்று கேட்டார். அவளுக்கு அவர் கொஞ்ச நேரத்துக்கு முன் சொன்ன வார்த்தைகள் ஞாபகத்துக்கு வந்தது, கண்டாலும் பேசுவதில்லை

என்று தன்னைத்தானே கண்டாக்கையா சொன்னார் என்று நினைத்து அவளும் ஏதோ சொல்வதற்கு வாய் எடுத்தாள். ஆனால், வார்த்தைகள் வெளிவரவில்லை, தயங்கினாள். அவர் அருகில் வந்தார். அவரே மறுபடியும் பேசவேண்டியதா யிற்று. ஆம், இவள் அந்தக் கருப்பண்ணன் பய நினைவால் தான் தன்னை வெறுக்கிறாள், என்று நினைத்து அவர் சொல் வார்...

'கம்பிமேல் கம்பியிருக்க
தங்கக் கம்பி நானிருக்க
பித்தளை கம்பிமேலே
பேராசை வைக்கலாமா'

என்றார், ஆம், தங்கக்கம்பி தான் இருக்கிறாராம். அப் படியிருக்க பித்தளைக் கம்பியாம் கருப்பண்ணன் மேல் ஏன் மனம் வைக்க வேண்டும் என்ற சொல்லாமல் சொன்னார். அப்படி யென்றால், அவளை ஏற்றுக்கொள்வதற்கு அவர் தயா ராயிருக்கிறாரா? இருக்கிறார் என்பதுதானே கருத்து. லச் சுமி என்ன அழகில் குறைவா? ரதிபோல் இருந்தாளே. மனம் கவரக் கூடிய அழகு அவளிடம் குடிகொண்டிருந் ததுதானே!

கொஞ்சம் கொஞ்சமாக லச்சுமி மனதிலும் சபலம் தட் டத் தொடங்கியது. கண்டாக்கையாவின் உள்ளக்கிடக்கை அவளுக்குத் தெரிந்து விட்டது. இனி வேண்டியிருந்தது. அவ ளின் விருப்பம்தான். ஏன்? அவள் தாய் தந்தையர்கள் கூட இதனை வேண்டாம் என்று சொல்ல மாட்டார்களே ஆம். வலிய வருகிற சீதேவியைக் காலால் உதைப்பார் களா என்ன? லச்சுமி மனதில் இவ்வாறான எண்ணங்கள் நிழலிட்டுப் பின் பிரகாசிக் த் தொடங்கின கூம், அடுத்த முறை கண்டாக்கையா எதுவும் கேட்டால், சம்மதம் சொல்லிவிட வேண்டியதுதான் என்று மனதில் நினைத்துக் கொண்டாள். இன்னுமொரு நாளும் அப்படியே கண்டாக் கையா பேச்சைத் தொடங்கினார்...



'பயிறிலே பயிறிருக்க
பாசிப் பயறு நானிருக்க
ஊசப் பயறுமேலே, நீ
உல்லாசம் வைக்கலாமா'

என்றார். லச்சுமி எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் கிடைத்தது. தான் இதனை நல்ல முறையில் பாவித்துக் கொள்ளவேண்டும் என்று நினைத்தாள். தன் மனதிலிருப் பதை வெளிப்படுத்த எத்தனித்தாள். எப்படிச் சொல்வது? தனக்கு உண்மையிலேயே கொள்ளை ஆசையுண்டு என்று சொல்லிவிட அவள் விரும்பவில்லை. தனக்கு ஒரு காதலன் இருந்தான் என்பது இவர் அறிந்ததுதான் ஆகையால் அத்தனையும் விளக்கி அதே நேரத்தில் இவரைப் பற்றியும் சிந்தித்துப் பார்க்கிறாள் என்பதை வெளியிட நினைத்தாள், ஒரே கல்லில் இரண்டு கனிகள் வீழ்த்தப்படவேண்டியிருந் தன. அவள் மிக மிக நுண்ணிதான இவ்விடயம் பற்றிக் கூறினாள். அவள் சொன்ன அழகைச் சற்று சிந்தித்துப் பாருங்கள் அவள் சொல்வாள் இப்படி...

'ஆத்துல ஊத்து நோண்டி
அவர்மடியில்நான் இருந்தேன்
ஊத்து குழி மண்ணெடுத்து
உன்னுருவம் செய்து பார்த்தேன்'

ஆகா, எவ்வளவு அழகான பதில். அவர் மடியில் தலை வைத்திருந்தாலும் கூட உன்னையும் என் மனதில் வைத் துச் சிந்தித்தேன் என்று சொல்லாமல் சொல்லி விட்டாள் இதைக் கேட்ட கண்டாக்கையாவுக்கு ஒரு புதுத்தெம்பு பிறந்தது. இவளை அடையலாம், எப்படியும் அடைந்து விடலாம் என்ற நம்பிக்கை பிறந்தது. ஆம், சதி செய்து கருப்பண்ணனை, தோட்டத்தை விட்டு துரத்தியதின் பலன் கிட்டும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. ஆகையால் கொஞ்ச நாட்கள் இதனையே மனதில் வைத்துத்தன் கடமைகளைச்

செய்து வந்தார். லச்சுமி வேலை பார்த்த மலைப் பக்கம் அடிக்கடி போய் வந்தார். தோட்டத்து மக்களுக்கும் விடயம் தெரிய வந்தது. ஆனால் அவர்கள் ஒன்றும் பேசவில்லை. பேசினால் அவர்களுக்கும் கருப்பண்ணனுக்கு வந்த கதி தான் வரும் இல்லையா?

கண்டக்கையாவுக்கு அவ்வளவு மதிப்பளித்து வந்தார்கள் மக்கள், அவருக்காக மட்டும் அல்ல, அவருக்கும் சின்னதுரைக்கும் ஏதோ ஒருவிதத் தொடர்பு இருந்தது என்று அறிந்ததால்தான் அவ்வளவு பயம் இருந்தது ஏதோ காலமும் இப்படியே கடந்தது ஏறக்குறைய கருப்பண்ணனுக்கும் மீனாட்சிக்கும் கல்யாணம் நடந்த அதே ஆண்டு தான் இங்கு தோட்டத்திலும், கண்டக்டருக்கும் லச்சுமிக்கும் 'டும்டும்' முழங்க வேண்டியதாயிற்று. கண்டக்கையாவே நேரில் வந்து கேட்டுக்கொள்ளும்போது வேண்டாம் என்றா சொல்லப்போகிறார்கள் சாதாரண கூலியாட்கள். எல்லாவற்றிற்கும் சரி சரி போடத்தான் முடிந்தது. மறுத்துக் கூறயாயிருந்தார்கள்.

'ஆத்தோரம் கொடிக்காலான்
அரும்பரும்பா வெத்திலையாம்
போட்டா சிவக்குதில்ல
பொன் மயிலே உன் மயக்கம்'

என்பது போல, அந்த மயக்கத்திலேயே இருந்து விட்டார் கண்டக்டர். புதுமணத் தம்பதிகள் மற்ற எல்லாரையும் போலவே தமது தேன் நிலாகாலங்களை, 'டவுனுக்கு' வந்து 'பயிஸ்கோப்' பார்ப்பதிலும், தோட்டத்தில் நடக்கும் காமன் கூத்து பார்ப்பதிலும் வேலைமுடிந்து வீட்டுக்குப் போகும்போது சோடியாகப் போவதிலும் கழித்தார்கள், ஏன்? அவர்களுக்குள்ளேயே இந்த நேரங்களில் கொஞ்சம் கேலியாகவும் பேசிக்கொண்டார்களே. நம் புது மணமகள் சொன்ன ஒரு விடயத்தை நீங்களும்தான் கேட்டுப்பாருங்களேன். அதிலுள்ள நகைச்சுவையும் நையாண்டித்தனமும் கொஞ்ச நஞ்சமல்ல. அவள் சொன்னாள்... ஆமாம், கண்டாக்கையாவைப் பற்றித்தான் சொல்கிறாள்...



'அந்த மச்சான் இந்த மச்சான்
ஆப்பம் வாங்கித் தந்த மச்சான்
கலியாண வேளையிலே
நெளியாம கைவச்சான்'

ஆமாம், கொஞ்ச நாட்களுக்கு முன், கலியாணம் ஆவதற்கு முன்தான் அந்த கண்டாக்கையா காத்தாயி கடையில் வாங்கிக்கொடுத்த அப்பம் முதலாய் அவள்ஞாபகத்தில் இருந்தது. அப்படி ஆப்பம் வாங்கிக் கொடுத்த ஆசாமி, கலியாண நேரத்தில் நடந்துகொண்ட விதத்தை வெகு ஆழமாக எடுத்துரைத்தாள். கண்டாக்டரும் லேசுப்பட்டவர் அல்ல. அவர் செய்த சேட்டைகளைக் கூறுவதென்றால்...சீ, வேண்டவே வேண்டாம். ஏன்? கலியாணத்துக்கு முன் அவரைப்பற்றிக் கூட லச்சுமியிடமே எத்தனையோ பேர் என்ன என்னவெலாம் சொன்னார்கள். அவர் சின்னத்துரையுடன் சேர்ந்து குடித்ததாகவும் ஏன்? 'கும்மாளம்' போட்டதாகவும் முதலாய்ச் சொன்னார்கள். ஆனால், அவள் அவைகளுக்கெல்லாம் செவிசாய்க்கவில்லை. ஏனெனில், அவளிடம் ஒரு நம்பிக்கையிருந்தது. அதாவது கண்டாக்கையாவை எப்படியும் திருத்திவிடலாமென்ற நம்பிக்கை. தன்னிடம் வந்து சொன்ன குறைபாடுகளை எல்லாம் கேட்டுவிட்டு அவள் சொன்ன மறுமொழி இதுதான் 'காளைக்கு இரண்டு கொம்புகளையும் சீவி விட்டு விட்டால் தன்னை மட்டும்தான் சுற்றி வரும்' என்ற பொருள்படவே சொன்னாள். இதோ......

'கண்ணங் கருத்த காளை
கண்ணாடி மயிலக் காளை
கொம்பு ரெண்டும் சீவிவிட்டா
கோபுரத்தை சுத்தி வரும்'

ஆமாம், கொம்புகளை 'சீவி' விடுவது அவள் கையில்தான் இருந்ததென்பதை அவள் நன்கறிவாள். ஒருமனைவியால் ஒரு கணவனைத் திருத்திவிட முடியும் என்ற தளராத கருத்து அவள் மனதில் பதிந்திருந்தது. அவளாகிய அந்தக் கோபுரத்தை மட்டும் சுற்றிவரச் செய்ய முடியுமென்று எண்ணினாள், அல்லாமலும், காளையாய் இருக்கும் வரை அப்படித்தான். கல்யாணம் என்ற கத்தி கொண்டு கொம்புகளைச் சீவிய பிறகு அது நடக்காது என்று அவள் அறிந்திருந்தாள்.

# 8

இவ்வாறு கலாச்சக்கரம் ஐந்து முறை சுற்றி வந்தது அந்நேரம்தான், நம் கதாநாயகர் கருப்பண்ணனின் அப்பா இறந்துபோனார். அவர் மரணமடைந்தவுடன்தான் அவன் இருக்கும் இடத்தை அறிய முயற்சித்தார்கள் தோட்டத்து மக்கள். ஏனெனில் அவர் இறக்கும்போது அவர் கேட்டுக் கொண்டது, தன்னின் மகனை அந்தத் தோட்டத்தின் கங்காணி ஆக்க வேண்டும் என்பதே. அந்த மரணமடையும் தறுவாயில் அவர் சொன்னதை நிறைவேற்றுவிட்டால் அவர்கள் பாடு என்ன! இரவில் வந்து அவர்களைக் கொன்று போடுவாரே! அந்த நம்பிக்கை அந்தத்தோட்ட மக்களுக்கு இருந்தது. ஆகையால் அவனை எப்படியும் கொண்டுவரப் பிரயத்தனம் செய்து கடைசியில் வெற்றியும் பெற்றனர். ஆனால் அவன் தன்னின் உண்மையான நிலையை மறைந்தான். தான் இன்னும் மணம் முடிக்காதவன் என்றே அங்குள்ளவர்களுக்குக் காட்டிக்கொண்டான் இவன் தோட்டம் நோக்கி வரும்போது கூட...



அரிசி கொடுத்த தொர
ஆக்கித் திங்க சொன்ன தொர
சீலை கொடுத்த தொர
சிரிச்சாராம் ஜன்னலிலே.

ஆம்...

அரிசி கொடுத்து ஆக்கித் தின்ன சொல்லி, லச்சுமிக்கு கல்யாண வேளையில் நல்லதொரு சேலையும் பரிசளித்த துரை அவன் திரும்ப வருவதைக்கண்டு ஒருவித ஏளனப் புன்னகை செய்தார். பார்த்துச் சிரித்தார். அவனுக்கு அதன் அர்த்தமே விளங்கவில்லை. அவனுக்கு எப்படித் தெரியும் லச்சுமி மணம் செய்துவிட்டாள் என்று. அல்லாமலும் அவள்தான் இப்பொழுது கொஞ்சம் பெரிய ஒரு பங்களாவில் வாழ்க்கை நடத்துகிறாளே. வேலைக்குப் போவாளா என்ன? தான் உண்டு தன் பிள்ளைகள் உண்டென்று ஆகிவிட்டதே அவளுக்கு.

இந்த இடத்தில்தான் நாம் நம் கதையின் தொடக்கத்துக்குப் போக வேண்டியுள்ளது. இப்படியாக ஓடிய நம் கதாநாயகர் கங்காணி கருப்பண்ணரின் வாழ்க்கையில்தான் நாம் முதலில் கூறிய அந்த பன்வத்தைத் தோட்டத்து முத்தம்மாள் தெரியாத் தனமாய் வந்துநுழைந்தாள்,

நாட்டுக்கு நாடு மட்டம்
நாமிருவர் ஜோடி மட்டம்
ஜோடியாக நாமிருந்தால்
சோறு தண்ணி கேட்டிடுமா?

துடிக்கும் நெஞ்சுடன் துடியிடையாள் சொல்லிமுடித்த அந்தக் கேள்விக்கு அவனால் ஒருவித பதிலும் சொல்ல முடியாமல் விழித்ததற்குக் காரணம் நமக்கு இப்பொழுது விளங்குகிறதுதானே? அந்நேரத்தில் என்ன சொல்வான் அவன்!

இடைநுடங்க நடைபயின்ருள் அவள். அவன் பின் தொடர்ந்தான். மௌனம் ஆட்சி செய்தது. கால்கள் நடந்தன. அவர்கள் சற்றே திறந்தவெளிக்கு வருந்திருப்பார்கள். ஆம், எவ்வளவு காலம் ஆனுலும் அவனுல் மறக்க முடியுமா என்ன? அந்தத் தொங்கலயம்தான்! அன்று லச்சுமியுடன்... ஆனுல்... இப்பொழுது அந்த லயம் இல்லே. இன்றைக்குத்தானே இந்தப்பககம் வருகிருன். இடம்அதுதான் ஆனுல் ஏதோ இரண்டொரு பங்களாக்கள் கட்டியிருக்கிருர்களே. அந்த பங்களாவுக்கு முன்னுல்... நாலேந்து பிள்ளேகள் சேர்ந்து வட்டமாக உட்கார்ந்து கொண்டு ஏதோ விளேயாடுகிருர்களே. அவர்களுக்கென்ன சுமார். மூன்று நான்கு வயதுதான் இருக்கும். அவர்களேப் பார்த்தான் அவன். பிள்ளேகள் அவ்னேக் கவனிக்கவில்லே. அவர்களுக்கெதற்கு அந்தக் கவலே. பிள்ளேகள் தொடர்ந்தார்கள்...

அத்தக்யா புத்தக்யா
தவளஞ் சோறு
எட்டு எருமை
எருமைப் பாலு
பாண்டி வந்து பரபரக்க
ஓங்கப்பன் பேரென்னு?

முருங்க்ப்பு-என்றது ஒரு குழந்தை.

முருங்கப்பு தின்னுதே
முள்ளாந் தண்ணியுங் குடிக்காதே
பாம்பு கைய பரக்கென்னெடு

என்றது ஒரு குழந்தை. அடுத்த குழந்தை...தொடர்ந்தது.



'எடுக்க மாட்டேன்'
முதல் ஆசாமி...
எடுக்காட்டி
கோழி கொடுக்க
தார் தார் வாழக்காய்
தையமுத்து வாழக்காய்
ஒத்த சாமி புள்ள பெத்த
ஒத்த கைய எடுத்துக்க

பார்த்துக் கொண்டிருப்பதற்கும் கேட்பதற்கும் அழகாகத்தான் இருந்தது. என்ன செய்வான். அவனுல் அந்த நேரத்தில் ரசிக்க முடியவில்லே. மனம் துன்பத்தால் நிறைந்திருந்தது. தன் மனேவியைப் பற்றியும் தன் ஒரே மகன் முத்தைப் பற்றியும் எண்ணத் தொடங்கினுன். அந்நேரம் விளேயாடிக் கொண்டிருந்த ஒரு குழந்தை ஒளிந்து கொள்வதற்காகத் தன்னிடம் ஓடி வருவதைக் கண்டான். சுமார் நான்கு வயதே இருக்கும். பார்த்தால் கூலிக்காரன் பிள்ளேபோல் தெரியவில்லே. அரையில் மட்டும் ஒரு 'களிசம்' அணிந்திருந்தது. தன்னிடம் ஓடி வந்த குழந்தையைப் பார்த்தான். உற்றுப் பார்த்தான். ஏன்! என்ன! அவன்! எங்கோ பார்த்த முகம்போல் இருக்கிறதே! இன்னும் உற்றுப் பார்த்தான் முத்தம்மாவுக்கும் 'முழிப்பு' அவன் எவ்வளவு தூரம் அந்தப் பிள்ளேயின் முகத்தை உற்று நோக்கினுன். அவனுக்கு, அந்தப் பிள்ளேயிடம் தனக்குத் தெரிந்த யாருடைய முகச் சாயலோ இருப்பதுபோல் தோற்றியது. அவன் முத்தம்மாவை நோக்கி இது யாருடையபிள்ளே என்று கேட்டான். முத்தம்மாளுக்குதான் தெரியுமே? அவள் சொல்ல வாயெடுத்தாள். ஆனுல் அந்நேரம்...;

அந்தப் பங்களாவின் வாசலில் ஒரு பெண் ஒரு குழந்தையைக் கையில் ஏந்திக் கொண்டு வாசலுக்கு வந்தாள் அவள்...

ஆத்துலொரு தென்னம்புள்ள
நூத்துலொரு பூ பூக்கும்
கையால பூவெடுத்தால்
காம்பழுகிப் போகுமின்னு
விரலாலே பூவெடுத்தால்
வேரழுகிப் போகுமின்னு
தங்க ஊசிகொண்டு
சரஞ்சரமாய் பூவெடுத்து
குண்டூசிக் கொண்டு
கொத்துக் கொத்தாய் பூவெடுத்து
செடிகொடியாய் பூவெடுத்து
செண்டு வண்டாய் மாலே கட்டி
ஒருமாலேயில்லே என்னு
ஓடி வந்தான் தா(ய்)மாமன்

என்று பாடிக் கொண்டே வாசல் அருகில் வந்தாள். தன்கையில் இருந்த அந்தத் தங்கத் தம்பிக்குக் கன்னத்தில் முத்தமிட்டாள். நெஞ்சோடி கட்டி அணைத்தாள். ஐயோ! அந்தச் சின்னஞ் சிறுசுக்கு நோகாதா என்ன? வாசலரு குக்கே வந்து விட்டாள். வாசற்படிக்கு வரும்போது கூட அவள் வாய் முணு முணுக்கத்தான் செய்தது. அரவணைத்த் கரங்களுடன்...

வெள்ளிப் பலகையிலே வேலரத்தின் திண்ணையிலே கல்லுப் பலகையிலே கணக்கெழுத வந்தவரே... என்றவள், தன் மூத்த மகனே அழைக்க 'தங்கம் தங்கம்' என்ருள். கருப்பண்ணனின் பின்ஞல் ஒளிந்திருந்த அந்தப் பிள்ளேயும் தான் விளேயாட்டுக்காக ஒளிந்திருப்பதை மறந்து 'என் னம்மா' என்று கத்திவிட்டது சத்தம் வந்த பக்கம் திரும் பிப்பார்த்தாள். கருப்பண்ணனின் கண்களும் அவள் கண் களும் சந்தித்தன. அவனுக்கு ஒரே அதிர்ச்சி... 'லச்சுமி' என்று கத்தப்போனவன் சமாளித்துக் கொண்டான். மறு கணம் அவன் நிற்காமல் திரும்பிப் போக எத்தனித்தான்.



அந்நேரம் பக்கத்திலிருந்த முத்தம்மா கூறுவாள்., மச்சான் ஏன் அவுங்கள இப்படிப்பார்த்து பயப்படுறீங்க அவுங்க பிள்ளே உங்க பின்ஞல் ஒளிஞ்சிகிட்டிருந்தது. அவுங்களுக்கு பிடிச்சிருக்காதுதான். ஏன்ஞ? அவுங்க இந்தத் தோட்டத்து கண்டாக்கையா கார்த்திகேசு ஐயாட பொண்டாட்டியில் லியா? ஆஞ நீங்க தவறு செய்யயில்லியே. அந்தப் புள்ள தானே வந்து ஓங்க பின்ஞல் ஒளிஞ்சுது' என்று கள்ளம் கபடமற்ற உள்ளத்துடன் சொன்ஞள். உண்மை அவளுக் குத் தெரியுமா என்ன? 'எந்தக் கண்டாக்கையாவ பற்றித் தன்னிடம் சொன்ஞளோ அவரையேதான் கட்டியிருக் காளா? அது அவ குற்றமில்ல ஏங்குற்றமின்னுதான் சொல்லணும். நான் இங்கேயே இருந்திருந்தா...! என்று எண்ணியவன் கண்முன், தன் மனேவி மீஞட்சியின் அழகிய தோற்றமும், மகனின் மனேகரமான முகமும் தோன்றின. மறு கணம் வந்த வழியே திரும்பிஞன். நடந்தான்... மட மட வென்று நடந்தான். முத்தம்மா திகைத்து நின்ருள். ஒன்றும் விளங்கவில்லே. 'ஏடி' முத்தம்மா' என்று அழைத் தாள் அந்த கண்டாக்கையா மனேவி. அவளும் சென்ருள். கருப்பண்ணனும் மறைந்துவிட்டான்.

அடுத்த நாள்...
ஆளுலேயும் நல்ல ஆளு
அழகுலேயும் பெருத்தவரு
பேரு சொல்லும் கருப்பண்ணன்
பெரட்டிலேயும் காணலியே

எங்கு சென்ருன் அவன்? அந்தத் தோட்டத்து மக்க ளுக்குத் தெரியுமா என்ன? ஒருவருக்கும் தெரியாதே! லச்சு மிக்கும் தெரியாதே! நமக்கு...!!

(முற்றும்)

# மலையகத்தின்

# பல்கலைச் செல்வர்

எழுத்தாளர், கவிஞர், நாடகாசிரியர், நல்லதொரு மேடைப் பேச்சாளர், நடிகர், பல்கலைத்துறைகளிலும் ஈடுபாடு கொண்டு தேனீயைப்போல சுறுசுறுப்புடன் இயங்கி வரும் ஏ. பி. வி. கோமஸ் இத்தனைக்கும் மேலே பாடசாலையொன்றின் பொறுப்புள்ள அதிபராகவும் இருக்கிறார்.

மலையகத்தின் பல பட்டதாரிகளை உருவாக்கிய பெருமையும், இவரையேசாரும். மலையக் கலை இலக்கியப் பேரவையின் தலைவராக இருக்கும் இவர். 1978ல் இலக்கியத் துறையில் தன் முதல் சுவடுகளைப் பதித்தார். 1960ல் 'தமிழமுதம்' என்ற சிறுவர் பத்திரிகையை நடத்தியுள்ளார்.

இதுவரை ஏ. பி. வி. கோமஸ் ஐநூறுக்கு மேற்பட்ட விதைகளையும், ஆயிரத்துக்கு மேற்பட்ட கட்டுரைகள், புதுக்கவிதைகளும் எழுதியுள்ளார். இன்னும் இளைஞரைப் போல் கவியரங்குகளுக்குத் தலைமை தாங்கி சொல்மாரி பொழிகின்றார், தன் அன்னையாரின் பெயரான 'ஜெயம்' என்ற பெயரிலும் கவிதைகள் எழுதியுள்ளார். அன்புத் துணைவியும், இரு பெண்களும், இரு ஆண்களும் கொண்ட சிறிய குடும்பத்தின் தலைவர் இவர். ஆனாலும் மலையகத்தின் பல்கலைச் செல்வராகத் திகழ்கின்றார்.

அந்தனி ஜீவா